# முரசொலி

2

மு.கருணாநிதி

முரசு 1 | சென்னை | மே இதழ் 30 — 4 — 54 வெள்ளி | ஒலி 5


## செப்புதல் கேட்பீர்!

சிற்றூரும், வரப்பெடுத்த வயலும், [ஆறு
தேக்கிய நல் வாய்க்காலும், [ வகைப் படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன் [விளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களே [லாம் எவரின் தோள்கள் ?
கற்பிளந்து மலைபிளந்து கனிகள் [ வெட்டிக்
கருவியெலாம் செய்து தந்த [கைதான் யார்கை?
பொற்றுகளைக் கடல்முத்தை [மணிக்குலத்தைப்
போய் எடுக்க அடக்கியமூச் சேவரின் மூச்சு ?

●

செப்புதல் கேட்பீர் ! — இந்தச்
சேகத்தொழிலாளர்கள் மிகப் பலர் ஆதலின்
கப்பல்களாக — இனித்:
தொழும்பர்களாக மதித்திட வேண்டாம் !
இப்போழுதே நீர் — போது
இன்பம் விளைந்திட உங்களின் சொத்தை
ஒப்படைப்பீரே—எங்கள்
உடலில் இரத்தம் கோதிப் பேறுமுன்பே!

— பாரதிதாசன்

★



## உறுதி கொள்வீர்!

போப்பின் கொடுமையைக் களைந்து எறிய—உலகம் தட்டையாக இல்லை, உருண்டையாக உள்ளது என்று சொல்ல—அண்டத்தில் உள்ளவற்றைத் தூரதிருஷ்டிக் கண்ணாடியால் கண்டு தெரிவிக்க, அலைகடலின் ஆழத்தை அறிந்துகூற, பல அறிஞர் தோன்றி பாதையை அழகுறச் செப்பனிட்ட பின்னர் தான் புரட்சித்தேவன் லெனின் தோன்றி வெற்றியுடன் உலாவ முடிந்தது………… தெருவுக்குத் தெருவு திருப்புகழ் பஜனை—தெருவுக்குத் தெரு உடுக்கைச் சத்தம்—வீதிக்கொரு பிள்ளையார் கோவில்—இப்படி இருந்தால் இந்த நாட்டில் எப்படி லெனின் பிறப்பான் எப்படி மாசே துங் பிறப்பான் ?

●

பஞ்சாங்கமில்லாத வீடுகளை நீங்கள் காணமுடியாது.

நாள் பார்க்காத மக்களை நீங்கள் பார்க்க முடியாது.

சகுனம் கேட்காத ஜென்மங்களை நீங்கள் காண்பது அரிது.

மார்கழித்திருநாள் கொண்டாடாத மக்கள் மிகமிகக் குறைவு.

மே திருநாளாகிய இந்த நல்ல நாளில் மக்களிடையே காணப்படும் மூடப்பழக்க வழக்கங்களை முறியடித்து ஜாதிமதக் கோட்டையைத் தகர்த்து சுக்கு நூறாக்க வேண்டும். இதை ஒவ்வொருவரும் வாக்குறுதியாக எடுத்துக் கொள்ளவேண்டும்.

— அண்ணா.

★

**திராவிடப் பாட்டாளி மக்களே ! ஒன்று சேருங்கள் !**

# தூக்கு சம்மட்டியை!

மாறன்

உள்ளம் உடைந்து—வியர்வை —வெள்ளம் பெருக்கி — அயர்வை அணைத்துத் தூங்கும் பாட்டாளித் தம்பதிகள்......

அடுக்கி வைத்த கொலுப் பொம்மைகளைப் போல பூனை தூங்கும் அடுப்புக்குப் பக்கத்திலே பானை பொங்கி வழிந்த நாளை எண்ணி நைந்துபோன குழந்தை குட்டிகள்......

—இப்படி இன்று நாம் காணுவது முதலாளித்துவ நாடுகளில் சர்வ சாதாரணமாகிவிட்ட அலங்கோலத் தோற்றங்கள்.

"மயில் கழுத்தின் வர்ண ஜாலத்தை எப்படி இந்தச் சேலையிலே திணித்தான்?"—என்ற கேள்வி கேட்டு மூக்கின் மீது விரல் வைக்கும் சீமாட்டிகள் அந்தச் சேலையை நெய்ய எத்தனை நாள் அந்தத் தொழிலாளி சேல் விழியாளின் துணையை இழந்திருக்கிறான் என்பதை நினைத்துகூடப் பார்ப்பதில்லை... மாடமாளிகைகளை எழுப்பியிருக்கிறானே, மாளிகைகளா அவைகள்... இல்லை; இல்லை; தொழிலாளி வர்க்கம் இழந்துவிட்ட இன்பத்தின் அழகுச் சமாதி... "அந்த மாளிகையின் அஸ்திவாரக்கல் ஒவ்வொன்றிலும் எங்கள் இரத்தம் உறைந்திருக்கிறது. எங்கள் ஆவி அதை வட்டமிட்டபடியே இருக்கும்...என்றைக்காவது ஒரு நாள் உன் இருதயத் துடிப்பை நிறுத்திய பின்னர் தான் அது சாந்தியடையும்"—பொறுமை இழந்த தொழிலாளத் தோழர்கள் இப்படி வாய்விட்டு அலறினார்கள்.

"வாடியிலே தள்ளிப் பூட்டிய ஆட்டு மந்தையைப் போல எங்களை யார் தொழிற்சாலையிலே பூட்டினார்கள்? சோலையிலே உலவும் தென்றலை வெப்பம்தகிக்கும் உலைக் கூடத்துக்கு அழைத்து வந்தது யார்? தேன் மதுரகீதம் நுழைய வேண்டிய காதுகளிலே இந்த இயந்திரங்களின்பேரிரைச்சல்தான் கேட்க வேண்டுமென்பது யாரிட்ட சட்டம்?"—காலை முதல் மாலைவரை — அதுவும் போதாதென்று நள்ளிரவு வரை, நாளொன்றுக்கு இருபது மணிநேரம் ஆலையிலே வாடும் தொழிலாளி வர்க்கம் இப்படி உச்சஸ்தாயியில் சப்தமிட்டது...இந்தக் கோஷம் முதன் முதலில் இங்கிலாந்திலே தான் கேட்டது...காரணம் இங்கிலாந்துதான் ஆலைகளை அமைத்து அதிலே இயந்திரங்களைப் பூட்டிய முதல் நாடு...தொழிலாளி வர்க்கத்தை திகைக்க வைத்த இந்தக் கேள்விக் குறியை உடைத்தெறிய முடியாது தவித்தனர் ஆலையிலே உழலும் மாந்தர்... "உன்னை மடக்கி வைத்திருப்பது அந்த தொழிற்சாலைதான் — உன்னை அடிமையாக்கியது அந்த இயந்திரம்தான்" என்று எங்கோயிருந்து பதில் வந்தது. வேறு ஒன்றும் யோசிக்காமல் உணர்ச்சி வசமானது அந்தக் கூட்டம். ஆலைக்குப் பின்னால் ஒளிந்திருக்கும் மலைபோன்ற பிரபுக்கள் அதன் சூத்ரதாரிகள் என்பதை உணரவில்லை, அவர்கள்! கூலியைக் குறைப்பதும் கங்காணிகளை ஏவுவதும் அந்த லாபவேட்டைக் காரர்களின் சூதுத்திட்டம் என்பது முதலில் புரியவில்லை—கொதித்துப்போன தொழிலாளர் கூட்டம் இயந்திரங்களை சுக்கல் சுக்கலாக உடைத்தெறிந்தது—இப்போதைய அமைதியான வேலை நிறுத்தங்களைப் போல 19-ம் நூற்றாண்டிலே இயந்திரங்களை உடைப்பது சர்வசாதாரணம். தொழிலாளிகள் கூலி உயர்வுக்காகவோ அல்லது வேறு எந்தக் காரணங்களுக்காகவோ ஒன்று சேருவது—ஸ்தாபனம் அமைத்துக் கொள்வது சட்ட விரோதம் என்று பயந்தது ஆங்கில சர்க்கார்—1824—வரை இங்கிலாந்தில் தொழிற்சங்க வரலாறு இப்படிப் பல அடக்கு முறைக்கு ஆளான கதையைத்தான் சொல்லுகிறது.

இன்று தொழிற்சங்கம்—முதலாளிகளென்னும் யானையை மடக்கும் அங்குசம்—ஒன்று திரண்ட சக்திகளை நடத்திச் செல்லும் தானைத்தலைவன்... 'பாஸ்டிலி சிறையை உடைத்தெறிந்த கூட்டம் தான் இயந்திரங்களை உடைக்கிறது' என்று ஒரு காலத்தில் சொல்லிய ஆளும் வர்க்கம்— பிரஞ்சுப்புரட்சியின் பிரதிபிம்பம்தான் தொழிற்சங்கத்தை ஊக்குவிக்கும் உண்மையான சக்தி என்று குற்றப்பத்திரம் வாசித்த ஆங்கில அரசாங்கம் பின்னர் அதன் உரிமைகளைக் காக்க சட்டம் இயற்றியது—பாராளுமன்றத்திற்கு உங்கள் பிரதிநிதிகளை அனுப்புங்கள் என்று பறைசாற்றியது!

இன்று காட்சிதரும் தொழிற்சங்கம் வளர்ந்துவரும் ஜனநாயக நாடுகளின் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனம். முக்கியமானபிரச்னைகளைத் தீர்க்கும்போது அரசாங்கம் அவைகளின் பிரதிநிதிகளை அருகே அழைத்து ஆலோசனை கேட்கிறது...

'யார் இந்த தொழிலாளிகள்? ஏன் இவர்களுக்கு ஒரு சங்கம்? சமீபத்திலே முளைத்த இந்த சங்கம் இதற்கு முன் ஏன் தோன்றவில்லை? அப்படியென்றால் அதற்கு முன்பு தொழிலாளர்களே கிடையாதா? 'அதன் நோக்கம் தான் என்ன?' இப்படி வெடித்துவரும் வினாக்களுக்குப் பின்னேதான் தொழிற்புரட்சியின் முழுவேகமும் அடங்கியிருக்கிறது. இந்த கேள்விகளுக்கு நாம் காணும் பதிலில்தான் மே தினத்தின் மேன்மை புதைந்து கிடைக்கிறது......

## தொழிற் சங்கம் எப்போது, ஏன் தோன்றியது?

19—ம் நூற்றாண்டு, வரலாற்றிலே வைரமணிகளால் எழுதப்பட வேண்டிய பேரேடு...அப்போதுதான் விஞ்ஞானப் பெருமரம் பூத்துக் காய்த்து முதன் முதலாக பெரிய அளவில் தீங்கனிகளை மானிட ஜாதிக்கு வாரி வழங்கியது...மனிதன் முதன் முதலாக நீராவியை உபயோகிக்க ஆரம்பித்தான்—எஃகின் உபயோகம் அப்போது தான் தெரிந்தது — உலோகங்களை உருக்குவதற்கு விறகுகள் வேண்டாம்; நிலக்கரி போதும் என்பதை உணரத் தொடங்கினான்... இந்த விஞ்ஞான வளர்ச்சியால் உற்பத்தி ஒரு தனி வேகத்தை எய்தியது...நீராவி எஞ்ஜின்—நூல் நூற்க—அதை நெய்து ஆடை தயாரிக்க இயந்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்டன—இந்தப் புதுமைகளையெல்லாம் முதன் முறையாகக் கடைப் பிடித்த நாடு இங்கிலாந்து தான். இந்த மாற்றத்தைத்தான் பேராசிரியர்கள் "தொழிற் புரட்சி" என்கிறார்கள்......

மின்னல் வேகத்தில் பிரபுக்கள் இந்த விஞ்ஞான வளர்ச்சியைக் காசாக்க முயன்றனர்... வீடுகள் தொழிற்சாலை யாக்கப்பட்டன...பள்ளிக்குச் சென்று பகுத்தறிவு பெற வேண்டிய பாலகர்கள்—சுள்ளி பொறுக்கச் சென்ற சிறுவர்கள் நள்ளிரவில் நடுக்காட்டில்சிக்கித்தவித்ததாகக் கதை கேட்போமே அதைப் போல பிரும்மாண்டமான இயந்திரங்களுக்கடியில் மாட்டிக் கொண்டு தவித்தார்கள்!

நேற்றுவரை தொழிலாளி வர்க்கம் தனக்கே சொந்தமான திறமையை தோளிலே போட்டுக்கொண்டு அகங்காரத்தோடு சுற்றியது. கையிலே உளியிருக்கும் அல்லது சம்மட்டி இருக்கும்—எதிரே மூலப் பொருள் இருக்கும்—அதை அடித்துப் பண்படுத்த அவன் மூளை வழி வகுத்துக் கொடுக்கும்......கூட கோபுரங்களைக் சுமந்து நிற்கும் தூண்கள் வேண்டுமா? அல்லது துள்ளி ஓடும் புள்ளி மானைப் போல சிலை வேண்டுமா? எது வேண்டும்? இதோ நான் செய்து தருகிறேன்" என்று புன் முறுவல் பூக்க தொழிலாளி தன் சுத்தியலை ஓங்குவான்

காலம் மாறியது. "திறமை ஒன்று மட்டும் போதாது தம்பி! உனக்குப் போட்டியாக அதோ இயந்திரத்தை சிருஷ்டித்திருக்கிறேன் பார்" என்று கேலி பேசியது தொழிற் புரட்சி! இயந்திரங்களை முடுக்க முதல் தேவைப்பட்டது—அவைகளை இயக்குவதற்கும் — தொழிற்சாலையையும் — தொழிலாளியையும் இணைப்பதற்கும்ஒரு ஆள் தேவைப்பட்டது— அப்படி இணைத்த மனிதன் முதல் —ஆளி என்று அழைக்கப்பட்டான். அவன் முன்னே தனிப்பட்ட தொழிலாளியின் திறமை மண்டியிட்டது. என்று 'திறமை' இப்படி 'முதலு'க்கு அடிபணிந்ததோ அன்றே துவங்கியது தொழிலாளி வர்க்கத்தின் துயர கீதம்...அன்று முதல் தொழிற் சாலைகள் வியர்வையை வெள்ளிப் பணமாக்கும் அபூர்வ மருந்துக் கிடங்காகக் காட்சி அளித்தன; உடலில் இருந்து வெடித்துக் கிளம்பும் ஊற்றுக் கண்களோ வென ஐயுறும்படி தரையை நனைக்கும் வியர்வைத் தடாகமாகத் தொழிலாளி காட்சி தந்தான்! நாளொன்றுக்கு பதினெட்டு மணி நேரம் அல்லது இருபது மணி நேரம்கூட அவன் கசக்கிப் பிழியப்பட்டான், அதுவும் குறைந்த கூலித்தொகைக்கு! கூலி உயர்வு வேண்டும் என்று கேட்பவர்களுக்குக் கசையடி பரிசாகத்தரப்பட்டது.

தின்று கொழுத்த முதலாளித்துவ சக்தி முன்பு—பண மலைக்கு முன்பு ஒரு தனிப்பட்ட தொழிலாளியின் கோரிக்கை ஒரு சாதாரண மடுவாகத்தான் காட்சி தந்தது. இதை அறிந்து கொண்ட தொழிலாளி வர்க்கம் ஸ்தாபன ரீதியில் ஒன்றுபட்டது; அந்த ஒற்றுமைச் சின்னந்தான் இன்று கொடி உயர்த்தி தொழிலாளரின் வளமைகூறும் தொழிற்சங்கம்; அந்த தொழிற்சங்கத்தின் வலிமை பெற்ற வஸ்திரம்தான் வேலை நிறுத்தம்!

இப்படி ஸ்தாபன ரீதியில் ஐக்கியப்பட்ட தொழிற் சங்கத்தின் முதல் போராட்டமாக 1884—ல் அமெரிக்காவில் 'எட்டு மணி நேர வேலை இயக்கம்' தொடங்கியது. 1889-ல் பாரீசில் கூடிய சர்வ தேசிய தொழிசங்க காங்கிரஸ் மேமாதம் முதல்

12ம் பக்கம் பார்க்க

# தலையங்கம்

சென்னை (30—4—54) வெள்ளி

## மே தினம்- சேலத்திலே கூடுகிறோம்!

வையத்தை வாழ்விப்போன் சிரிப்பு சிந்தும் நன்னாள்-சிகாகோ கரம் சித்தரித்த பொன்னாள். அந்த நாளிலே—எந்த நாளும், இந்த நாட்டுக் குழைப்போம் என உறுதி யெடுத்து உலவும் தி. மு. கழகத்துத் தோழர்கள் சேலம் மாநகரத்தில் கூடுகிறோம். சிகாகோ, தொழிலாளர் ந்து பாடிய இடமென்றால், சேலம், திராவிடர் இயக்கத்தை தோற்று வித்த இடமாகும். அங்கே தான் நமது இருபெரும் மாவட்ட மாநாடு கள் நடைபெறுகின்றன. மாநாட்டுப் பந்தலிலே நாம் கூடியிருக்கிற நேரத்திலே, சிறைக் கூண்டுகளிலே சதிவழக்கு குற்றத்திற்கு ஆளாக் கப்பட்டு அடைபட்டுக் கிடக்கிற துத்துக்குடி மாணிக்கங்களை மறந்து விட முடியாது. நமது இதயமெல்லாம் நிறைந்து கிடக்கும் அந்தத் தங்கங்கள்! ரத்தினங்கள், கம்பிகளுக்கிடையே வாடுகிறார்கள் பல ங்களாக, பத்து மாதங்களாக! தங்கப்பழம், ரத்தினம், சிவசாமி, கே. வி. கே. சாமி, நடராசன் ஆகியோர் கூண்டுப் பறவைகளாகி முன்னூறு நாட்களாகப் போகின்றன.

கல்லக்குடி வழக்கிலே ஈடுபடுத்தப்பட்ட நமது அருமைமிகு நண்பர்கள் கண்ணதாசன், திருச்சி மாவட்ட செயலாளர் தரும லிங்கம், தம்புசாமி, ஷெரீப் மற்றும் பலர் ஜாமீனில் விடுதலை பெற்று உயர்நீதி மன்றத்துக் கூண்டிலே நிறுத்தப்பட இருக்கிறார்கள்.

இருபெரும் வழக்குகளை தி. மு. கழகத்தின் மீது வீசிவிட்டு, ஆச்சாரியார் தன் கடையை மூடிவிட்டுப் போய்விட்டார். அடுத்து வந்த காமராசரின் புதிய அமைச்சர்அவை அந்த வழக்குகளை வாபஸ் பெறுமா? என்ற கேள்விக்குரல் நாடெங்கும் எழுச்சியோடு ஒலித்த வண்ணமிருக்கிறது.

தி. மு. க. நடத்திய புதிய கல்வித்திட்ட எதிர்ப்புப் போராட்ட ம், முடிவு பெறாத நிலையில் புது மந்திரிக் குழுவின் போக்கு என்ன ன்று உன்னிப்பாகக் கவனித்தபடியிருக்கிறது நாடு. பண்டித நேரு தன்னகம் வரும் போதெல்லாம் துடுக்குமொழி வீசிச்செல்கிறாரே; தற்கோர் முடிவு கிடையாதா? எனக்கொதித்துக் குமுறுகிறது ராவிடத்தரணி.

இந்த சமயத்திலே தான் சேலம் மாநாடு நடைபெறுகிறது. இரு மாநாடுகள். இரண்டும் இன எழுச்சி மாநாடுகள்.

முதல் நாள் சமுதாய மாநாட்டிற்கு திருவண்ணாமலை தீரர் . உ. **சண்முகம்** தலைமை வகிக்கிறார். தஞ்சைத்தரணி தந்த ளஞ்செல்வம் வழக்கறிஞர் **கோகுல கிருஷ்ணன் பி. ஏ. பி. ல்**, திறந்து வைக்கிறார். அரசியல் மாநாட்டை நமது கெழுதகை ண்பரும், தூத்துக்குடி சதி வழக்குகளை கழகச் சார்பில் முன்னின்று டத்தும் தகைமையாளருமான வழக்கறிஞர்—வாலிபத்தென்றல் தோழர் **இளம்வழுதி எம். ஏ. பி. எல்**, அவர்கள் தலைமையேற்று டத்துகிறார். மதுரை மாவட்டம் தந்த கழக வீரர், செயல் சிங்கம் தோழர் **முத்து** திறப்பாளர் பணிபுரிகிறார்.

பொதுச் செயலாளர் அண்ணா அவர்களும், கழக முன்னணி ரர்களும் கலந்து கொள்கிறார்கள். நடிப்புப் புலவர் நடத்தும் ர் இரவு-காதல் ஜோதி நாடகங்களுடனும், இசை முரசு நாகூர் னிபா அவர்கள் குழுவினரின் இன்னிசை கீதத்துடனும் சேலம் மாநாடுகள் நடைபெறுகின்றன.

மே தினத்திலே சேலத்திலே கூடியிருக்கும் திராவிடத்து ன்மை காக்கும் தீரர்கள் அனைவரையும், சேலம் மாவட்டத்தின் ர்பிலும், வரவேற்புக் குழுவினர்களான, ஜி. பி. சோமசுந்தரம், ராம ங்கம், குப்புசாமி, சிவப்பிரகாசம், தாண்டவன், ப. கண்ணன்; கோபால் ஆகியோர் சார்பிலும் "வருக! வருக!" என வரவேற்கிறோம்.

இந்த மாநாடுகளிலே!

" ஆச்சாரியார் கல்வித் திட்டத்தை திரும்பப் பெறுக! "

" கல்லக்குடி, தூத்துக்குடி வழக்குகளை வாபஸ் வாங்குக! "

என்ற உரத்த குரல்களை எழுப்புவோம். " திராவிடம் நமது " என்ற உரிமைக் குரலையும் எழுப்புவோம்.

## அந்த நாள்

இன்றைய பிரதமர் நேரு, அந்த நாளில் விடுதலை வீரர் நேருவாக இருந்தார். அப்போது சிறைக் கோட்டத்திலே எழுதிய கருத்துக்கள் ஏராளம். அவைகளிலே ஒரு சிலவற்றை கீழே தருகிறோம். முன்—நேரும், பின் நேரும் எவ்வளவு வித்தியாசப் படுகிறார்கள்—எவ்வளவு முரண் படுகிறார்கள் என்பதை தெரிந்துகொள்ளுங்கள். (ஆ—ர்)

ஆளுகின்ற அந்நிய வகுப்பு, அதிகாரம்—உயர் பதவிகளை தனக் கென்று வைத்துக்கொள்வதால், ஆளப்படும் நாட்டைச் சேர்ந்த உயர்வகுப்பார் அவற்றை அடைய முடியாமல் போய் விடுகிறது.

வெற்றிகரமான ஒரு தேசீயப் புரட்சி அன்னிய வகுப்பை முதலில் ஒழிக்கிறது. உடனே அந்த அன்னிய வகுப்பு வகித்த ஸ்தானத்தை தேசத்தின் உயர் வகுப்பார் அடைகிறார்கள்.

அதற்குப் பின் அத்தேசம் இன்னொரு தேசத்தின் நன்மைக்காக ஆளப்பட மாட்டாதாகையால், பொதுவாக தேசமும் நன்மை அடைகிறது. தேசீயப் புரட்சியுடன் சமூகப் புரட்சியும் தோன்றினாலொழிய விடுதலையடைந்த நாட்டின் கீழ் வகுப்பார் அதிக நன்மை அடையமுடியாது போகலாம்.

மற்றப் புரட்சிகள், வெறும் மேற் போக்கான மாறுதல்களை உண்டாக்குகின்றன. சமூகப் புரட்சியில் அரசியல் புரட்சியும் அடங்கியிருக்கிறது. ஆனால்அது சமூகத்தின் கட்டுக் கோப்பையே மாற்றி விடுவதால் அரசியல் புரட்சியைவிடஅதிகப் பிரபாவம் வாய்ந்ததாகும்.

ஃ ஃ ஃ

புதிய நிலைமைகளின் கீழ் பழைய ஏற்பாடுகள் சாத்யமில்லை என்பது தெளிவாகத் தெரிந்த பின்னும்—அதை மாற்ற எண்ணாத மக்களும் இருந்திருக்கிறார்கள் என்பது ஆச்சரியமே!

ஃ ஃ ஃ

அதிகாரத்தில் உள்ள தனி மனிதனோ — அல்லது வகுப்பாரோ — உள்ளதை விடாமல் பற்றிக்கொள்ளவிரும்புகிறார்கள். அதற்கு சுலபமான வழி, மற்ற வகுப்பாரையும் ஜனங்களையும் ஏற்கனவே நடை முதலில் உள்ள சமூக ஏற்பாடுதான் எல்லாவற்றையும்விட சிறந்தது என்று நம்பும்படி செய்வதுதான்! இதை ஜனங்கள் மனதில் பதியவைப்பதற்கு அவர்கள் மதத்தையும் இழுத்துக்கொள்கிறார்கள். கல்வியும் இந்தப் பாடத்தை வற்புறுத்துகிறது. அந்த ஏற்பாட்டின் கீழ் கஷ்டப்படுகிறவர்கள்கூட பிறர் தங்களைஉதைப்பதும், தாங்கள் பிறரிடம் உதை படுவதும்—பிறர்,உண்டு கொழுத்து உல்லாசமாக வாழ்வதும்—தாங்கள் பட்டினி கிடப்பதும்—நியாயம்தான் என்று உண்மையாக நம்புகிறார்கள்.

"கஷ்டப்படுவது கஷ்டமடைவோர் பிசகு—அது அவர்களின் தலைவிதி-பூர்வ ஜென்ம பாவம்—அதற்கு யார் என் செய்வது—அனுபவிக்கவே வேண்டும்" என்று சமூகம் எண்ணுகிறது.

போக்கை மாற்ற—விரும்புகிறவரை—அந்த சமூகம் தண்டிக்கவும் துணிகிறது.

ஃ ஃ ஃ

கர்நாடகமான கட்டுப் பெட்டிக் கருத்துக்கள் சமூகப் புரட்சியை தாமதிக்கச் செய்யலாமே ஒழிய நிறுத்திவிட முடியாது. ஆனால் புரட்சிக்குரிய பரிபக்குவ நிலை இல்லாவிட்டால் ஒரு சிலர் என்னதான் பிரம்மப்பிரயத்தனம் செய்தாலும் அதை உண்டு பண்ண முடியாது.

ஃ ஃ ஃ

சமூகம் காலத்துக் கேற்றவாறு (மூடக் கொள்கையை விட்டு விட்டு) தன்னை மாற்றிக் கொள்ளுமாயின் சமூகப் புரட்சி தோன்றாது. புரட்சிக்குப் பதில், சமூகம் இயற்கையை ஒட்டி இடைவிடாமல் வளரும் வளர்ச்சியைச் தானிலும்.


முரசொலி

ஆண்டு சந்தா ரூ. 6—0—0
ஆறு மாத சந்தா ரூ. 3—8—0

ஆறுமாதத்திற்கு குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது.

# பாகிஸ்தான் "பர்தா"-ஸ்தானாகிறது

"அது ஒரு விஷ விருட்சம்!"

"வேல் சொருகும் விழிகளோடு விலைமகள் ஊட்டும்மோக போதையைவிட மோசமாயிற்றே அது!"

— இப்படி மதத்தைப்பற்றி அறிஞர்கள் பலர் அபிப்பிராயம் சொல்லிவிட்டனர், ஆண்டுகள் பலவற்றிற்கு முன்பே! செவ்வாய் உலகிற்கு எப்போது செல்லலாம்? நட்சத்திர மண்டலத்தை எட்டிப் பிடிப்போமா?

— இப்படிப்பட்ட சாதனைகளைச் சாதிக்கும் சக்தி படைத்தவன் நான் என்று மார்தட்டி நிற்கும் பகுத்தறிவின் கூறிய கண்களைப் பிடுங்கி, அஞ்ஞானத் தீயிலே போடும் மதத்திற்கு இன்று நேற்றல்ல எதிர்ப்பு ஏற்பட்டது! என்று மதம் பிறந்ததோ அன்றே அதை எதிர்ப்பவர்களும் இரட்டைக் குழந்தைகளாகத் தோன்றிவிட்டனர்.

அன்றொரு நாள் இப்படித்தான் துருக்கியின் சந்துபொந்துகளிலெல்லாம் பழமை தன் சர்வாதிகாரத்தைநடத்திக்கொண்டிருந்தது! காலிப்பின் ஆட்சியிலே பகுத்தறிவிற்கு இடமில்லை. மூடியிட்ட முகத்தோடு — கறைபடிந்த நிலாவாக பெண்மை உலா வந்தது. அடுப்பங்கரைக்குள்ளே அறிவுச் சுரங்கம் அடைபட்டுக் கிடந்தது. "இந்த அநீதியைக் கேட்பார் கிடையாதா?" என்றபேரிரைச்சலுக்குப்பதில் சொல்ல முடியாது துருக்கி தவித்துக்கொண்டிருந்தது. பழமை இருள் நீக்க பாடி வரும் உதய சூரியனை பவனி வந்தான் கெமால்பாட்சா. எங்கு கெமால் தன் படைகளை தன் மீது மோதி விடுவானோ என்று பதை பதைத்தன பக்கத்து நாடுகள். உண்மையில் கெமால் போர்ப் பரணி பாடினான்—கொடி உயர்த்தினான்-சைன்யத்தை ஏவினான்—அயல் நாட்டின் மீதல்ல; சொந்த நாட்டிலுள்ள எதிரிமீது! அவனுடையபீரங்கிச்சப்தம் துருக்கியின் ஒவ்வொரு வீட்டிலும் முழங்கியது; பகைவரின் நெஞ்சின் ஆழத்தை அளக்க வேண்டிய அவன் ஈட்டி முனை, பூக்காட்டினுள்ளே புகுந்துவிட்ட பூநாகம் போல —பெண்களைமூடியிருக்கும் பர்தாவைக் கிழித்தெறிந்தது......அவன் சர்வாதிகாரிதான்—அவன் சர்வாதிகாரம் கொடுமைக்கு கொட்டு மேளம் கொட்டி வரவேற்பு அளிக்கவில்லை—எல்லோரும் "பெஸ்" குல்லாய் அணியக்கூடாதென்று கட்டளையிட்டது ... அநாகரிகப் பண்பாடுகளை விரட்டி ஓட்ட அவன் அடக்கு முறைக் கணைகளை ஏவினான்........"பொங்கு கதிரே! தொங்கிவிட்ட பகுத்தறிவு மாளிகையை தாங்கி நிற்கும் தூணே புரட்சிக்கு வித்தே! புதுமையே!" என்று இளைஞர் கூட்டம் அவனுக்கு வாழ்த்துக் கொடுத்தது......

அப்போதெல்லாம் துருக்கியில் என்ன ஆட்சி நடக்கிறது என்றால் மக்கள் ஆட்சி என்று பதில் வராது. துருக்கியில் இஸ்லாம் ஆட்சி புரிந்தது. கெமாலின் புரட்சித் திட்டங்களிலே முதலிடம் துருக்கியை மதச் சார்பற்ற சர்க்கார் ஆக்கியதுதான். அன்று முதல் இஸ்லாம் தனிப்பட்டவர்களின் மதமாயிற்று.

மதம்—மானிடவர்க்கம் கடைப்பிடிக்க வேண்டிய கோட்பாடு—வாழ்க்கை முறை யென்னும் கணிதத்தை சரியாகச் செய்ய உதவும் வாய்ப்பாடு—இந்த இலக்கணத்திற்கு ஊறு செய்யும் எந்தக் கொள்கையையும்பகுத்தறிவு மதமென ஒத்துக்கொள்ளாது. அறியாமைப் படுகுழியிலே விழுந்த எண்ணற்றவர்களுக்கு கிறித்துவம் உதவி செய்ததா?... அப்படியானால் பகுத்தறிவு மதத்தின் அந்தச் செயலை முழு மனத்தோடு ஆதரிக்கும். கொடுமை வடித்துக் கொடுக்கும் கூர் வாளாம் சோட்சேக்களை மதம் உண்டுபண்ணினால் பகுத்தறிவு தன் படையை மோதும்......

இப்படி மாறிவரும் புது உலகில் ஒரு திடுக்கிடும் செய்தியை பாகிஸ்தான் சென்ற திங்கள் அறிவித்தது. பாகிஸ்தான் இனி முஸ்லிம் நாடாம் — இஸ்லாம் தான் அந்த நாட்டின் மதமாம்—இருபதாம் நூற்றாண்டின் ஏனைய நாடுகளைப் போல மதச் சார்பற்ற நாடல்லவாம் அது! உலகத்தின் பகுத்தறிவு சாம்ராஜ்யம் இந்தச் செய்தி கேட்டு பதை பதைத்தது.

பழமைக் காட்டாற்றின் ராட்சஷச் சுழலிலே சிக்கித் தவித்த துருக்கியரை மீட்டுத் தந்து—மௌடீகமென்னும் கலப்புகளைக் களைந்து துருக்கியை உருக்கி வார்த்த தங்கச் சிலையாக்கித்தந்த அந்த நடமாடும் நெருப்பு கெமால் எங்கே? பழமைக்கு முழந்தாளிடும் இலட்சியம் இழந்த முகமதலி எங்கே?

பகுத்தறிவு சாம்ராஜ்யத்தின் ஏகச் சக்ராதிபதி அங்கே, அங்காராவில்!

மதம் என்னும் அபின் தின்று ஆடும் முகமதலி இங்கே, கராச்சியில்!

உலகமெங்கும் உள்ள நாடுகள் தங்கள் அதிருப்தியைத் தெரிவித்தன, ஒரு மதம் அரசாங்கத்தோடு இணைவது பற்றி! சாம்ராஜ்யங்கள் இந்தவியாதியால் கஷ்டப்பட்டது உண்டு! போன நூற்றாண்டோடு இந்த வியாதி நின்றுவிட்டதாகத்தான் சரித்திரம் நினைத்திருந்தது. அந்த நினைப்பைச் சூறையாடிவிட்டார்—கனவைக் கலைத்துவிட்டார்—பாக் பிரதமர் முகமதலி......

முஸ்லிம் மதத்தை நாம் எதிர்க்கவில்லை. நபிகள் நாயகம் அரேபியா நமக்குத் தந்த மற்றொரு திருவள்ளுவர்...மதமும் அரசாங்கமும் கை கோர்த்துச் செல்லும் நிலையைக் கண்டுதான் பகுத்தறிவு உலகம்கண்ணீர்வடிக்கிறது! பாகிஸ்தான் கண்ணீர் துடைக்குமா? கண்யம் பெறுமா? ஃ

# வில் வளைகிறது -- வெண்புறு மிரளுகிறது!

ஏகாதிபத்திய வெறி எப்போதுமே 'அற்ப ஆயுள்' பெற்றதுதான் என்பது முதுமொழியாகிவிட்டது. உலகத்தின் சுபீட்சத்தை நிர்மூலமாக்கிப் போன உலகப் போர்கள் இரண்டுமே இதைத்தான் நமக்குப் படிப்பினையாக்கி யிருக்கின்றன. என்றாலும் போர் மேகம் உலகைக் கவ்விக் கொண்டிருக்கிறது. புவியரசுகளின் வரலாறு தோன்றிய காலத்திலிருந்து புரட்டி, புரட்டி வைக்கப்பட்ட பிரான்ஸ் இன்னும் பாடம் கற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை.

சீனாவுக்குத் தெற்கே உள்ள இந்தோ சீனாவில் விடுதலை வேட்கை உருப்பெற்று எழுந்துவிட்டது. தாயகத்தில் பிரஞ்சு ஆதிக்கத்தை ஒழிக்க இந்தோ சீனா கச்சை கட்டி நிற்கிறது. ஆதிக்க மோகம் கொண்ட ஓரிரு நாடுகளைத் தவிர மற்ற நாடுகள் அனைத்தும் இந்தோ சீனாவின் விடுதலைக் கிளர்ச்சியை ஆதரிக்கத்தான்செய்கின்றன. ஆனாலும் பிரான்சு விட்டுக் கொடுக்கமறுக்கிறது—அதனுடைய ஆணவக் குரல் கம்மியதாகத்தெரியவில்லை. பிரான்சினுடைய பிடிவாதமும் பூமியாசையும் அதற்கே வினையாக முடியலாம். பலம் பொருந்திய டூப்ளேயின் படையை முறியடிக்க கிளைவ் இரு முனைத் தாக்குதலைச்செய்தான், இந்தியத் துணைக் கண்டத்தில்! டூப்ளேயின் அந்த 'ஆற்காடு வீழ்ச்சி' தான் பிரான்சின் கனவை படுசூரணமாக்கியது. பிரான்சின் மூல பலத்தை அன்று கிளைவ் பிரித்தான்—ஆனால் இன்றோ பிரான்ஸ் தானாகவே பிரித்துக் கொள்கிறது, ஆமாம்; புதுச்சேரியிலே ஒரு கண், இந்தோ சீனாவிலே ஒரு கண்! அதே நேரத்திலே இன்னொரு செய்தியையும் மறந்துவிடக் கூடாது. "பெற்றோர்கள் குழந்தைகளை கடுமையாக நடத்தினால் அவர்களுக்கு மரண தண்டனை" என்று பிரான்ஸ் ஒரு சட்டம் பிறப்பித்திருக்கிறது சொந்த நாட்டில்! இதனால் பிரான்சின் அரசு பீடத்தின் மீது அந்த நாட்டு பொது மக்கள் அதிருப்தி கொண்டிருப்பதாகவும் தெரிய வருகிறது! பரிதாபம்! பிரான்சிற்கு இது ஒரு சோதனை காலம் போலும்! 'குபேர நாடு' கை கொடுக்க காத்து நிற்கிறது என்பதற்காக கோர நடனம் ஆடி குப்புறக் கவிழாதிருக்க பிரான்சுக்கு எச்சரிக்கிறோம்—இந்தோ சீனாவின் இரும்பு விலங்கு முறியட்டும்! வில்லேந்திகள் வெண் புறாக்களை பறக்க விடட்டும்! ஃ

## ரசமான செய்தி!

ரோமாபுரியை ஆண்டோரில் அகஸ்டஸ் என்பான் ஒருவன் மிகுந்த புத்திசாலி. ஒரு சமயம், சிசிலி தேசத்தான்ஒருவனை சந்திக்க நேர்ந்தது. அவன் நிறம், உயரம், தேக அமைப்பு, முகம், எல்லாம் அகஸ்டஸைப் போலவே இருந்ததாம். ஒரு இடத்தில் இருவரையும் நிறுத்தினால், அடையாளம் கண்டு பிடிக்க முடியாதாம். இந்த அபூர்வமான ஒற்றுமையின் காரணம், அகஸ்டசுக்கு விளங்கவில்லை. ஒருவேளை, சிசிலிக்காரனுடைய தாயார் ரோமாபுரிக்கு வந்தபோது தன்னுடைய தந்தை அவள் மீது ஆசைப்பட்டு இருவருக்கும் உடல் சம்பந்தம் ஏற்பட்டு, அதன் மூலமாக இவன் பிறந்திருப்பானோ!- என்கிற ஐயம் மூண்டதாம், மனதில். இதை நெஞ்சில் வைத்துக் கொண்டு, "ஏம்பா! 'உன்னுடைய தாயார் எப்போதாவது ரோமாபுரிக்கு வந்ததுண்டா?", என்று கேட்டாராம். சிசிலியானுக்கு சக்கரவர்த்தியின் சந்தேகம், அவர் முகக்குறியிலிருந்து விளங்கிவிட்டது. அவன், சொன்னபதில், "அரசே! என் 'தாயார் ரோமாபுரிக்கு ஒருபோதும் வந்ததில்லை. ஆனால் என் தகப்பனார் அடிக்கடி வந்ததுண்டு!!"

# புகழ்மேதை

( கருணை )

விஞ்ஞான ஆராய்ச்சியிலே அவனுக்கு நிகர் யாருமில்லை. இந்தியாவின் ஈன்ஸ்டின் என்று உபகண்டம் பாராட்டுப் படித்தது. சரித்திர ஆராய்ச்சியின் கதையைக் கண்டவன் அவன். சார்லஸ் ஆண்டபோது நடந்ததைக் கூற வேண்டுமா? ஷாஜகானின் குணாதிசயங்களை ஒன்றுவிடாமல் சொல்லவேண்டுமா? சாசர் காலமா? சீசர் வீரமா? எல்லாமே அவனுக்கு மனப்பாடம்! சுருங்கச் சொன்னால் அவனே ஒரு சரித்திரப் புத்தகம்.

இலக்கியத்திலே எதுபற்றி அவனிடம் விவாதிக்கவேண்டும்? எதற்கும் தயார்! கவிதைத் துறையிலே கம்பனா? ஷெல்லியா? காளிதாசனா? டென்னிசனா? பைரனா? பாரதியா? யாரைப் பற்றியும் கருத்துரைகள் வழங்குவதிலே அவனுக்கு நிகர் யாருமில்லை என்பது மட்டுமல்ல; அந்தக் கவிதா மண்டலத்தோடு போட்டியிட்டவும் திறமை பெற்றவன். பொருளாதாரம் பற்றி விளக்கம் தேவையா? காரல் மார்க்ஸ் அனுப்பி வைத்த தூது போல தொடங்கி விடுவான், பொருளாதாரப் பிரசங்கத்தை. அமெரிக்காவின் ஆஸ்தி என்ன? ரஷ்யாவின் ரகசிய மென்ன? இதுபோன்ற விபரங்களை மிக எளிதில் கற்றுத்தர வல்லோன். கணிதத்திலோ மேதை! பூகோளத்துப் புலி! அரசியலிலே அவனோர் பிளேட்டோ! சமுதாயத்திலே சாக்ரடீஸ்! எழுத்திலே பெர்னாட்ஷா! ஷேக்ஸ்பியர் இவரின் கூட்டு! பேச்சிலே டெமாஸ்தனிஸ், இங்கர்சால் இருவரின் கலப்பு! இத்தகைய மேதை! புதிய பாதை வகுத்தவன்! அவனது பெயர் கூறவே மக்கள் தயங்குவர்; பெயரைக் கூறுவது அவன் பெருமையை இழிவுபடுத்துமோ என்ற சந்தேகத்தால்! ஆகவே அவனை மேதை என்றே அழைத்தது இந்த மேதினி. சில புலவர்கள்கூட அழகாகச் சொல்லுவார்கள் அவனது பெயரைப் பற்றி. "மே" என்பது உலகத் தொழிலாளரின் உற்சவதினம்; "தை" என்பது திராவிடத் தமிழரின் உழைப்பு வெற்றிதினம்; ஆகவே இரண்டு பெருந்திருநாட்களும் சேர்ந்தமைந்த பொருத்தமான பட்டம் மேதை என்று! நமது சிந்தை கவர்ந்தவனுக்கு சிறப்பான பெயர் அமைந்துவிட்டது என்று கூறி மகிழ்வர் பல்லோர். வயதோ முப்பது நிறையவில்லை. வாலிபத்தென்றல். அதற்குள்ளாக அவனுக்கு வந்துகுவிந்த புகழோ பெருங்குன்றம்!

அவனைச் சுற்றி வாழ்த்து பாடியபடி எந்நேரமும் இருப்பர் மாணவரும், தொழிலாளரும், பண்டிதரும், பாமரரும்! தனக்கு எத்தனை பெருமை வளர்ந்திருக்கிறது என எண்ணும்போது, மணக்கும் அவன் நெஞ்சம். புகழ் கண்டு பூரிப்படைவான். ஆனாலும் அவன் உள்ளம் புகையும் எரிமலை போல இருந்ததை அவனால் மறைக்க முடியவில்லை. மறைப்பதற்கு மிகவும் கஷ்டப் பட்டான்.

## புகழ்! புகழ்!! புகழ்!!!

யாருக்கு வேண்டும் இந்தப் புகழ்? சரித்திர விற்பன்னன்—ஜகம்புகழும் பூகோள மேதை-கணித நிபுணன் – கவிஞர்க்கு மன்னன் - எழுத்துவேந்தன் என்றெல்லாம் உலகம் உளருகிறது அவனைப்பற்றி! ஆனால், அவனோ துடித்துக் கிடக்கிறான். "தொலையாதோ இந்தப் புகழ்" என்று மனம் வெடித்துச் சாகிறான். காரணம் அவனால் தனியே எங்கும் போக முடியாது. மாலை நேரத்தில் கடற்கரையில் உலாவி வரலாமா? முடியாது. கூடாது என்று தடையல்ல; அவன்போக முடியாதபடி புகழ் அவனைத் தடுத்தது. நூறு, ஆயிரம் என்று மக்கள் சூழ்ந்து கொள்வர். 'மேதை' வந்துவிட்டார் என்ற செய்தி எங்கும் பரவும். தனிமையை நாடி வந்த அவன் புகழ் தரும் தலைவலி தாங்காமல் ஓட்டமாக ஓடி வீட்டுக்குப் போய் விடுவான். ரயிலில் போக முடியாது. கடைத் தெருப்பக்கம் தலைகாட்ட இயலாது. கண்காட்சி சாலைகளில் காலடி வைக்க முடியாது. புகழ்—புகழ்-புகழ் எங்கும் புகழ்! அந்த மேதையின் நற்பண்புகள் பற்றி பேசாதார் இல்லை. "காதலனும் காதலியும் கொஞ்சிடும் அந்தஅழகான நந்தவனத்தைப் பற்றி உணர்ச்சி பொங்கிட வர்ணித்திருக்கிறானே; அந்த ஒய்யார வனத்திலே உல்லாசகீதம் பாடும் ஜீவஜோடிகளை யாரும் சித்தரிக்காத வண்ணம் சித்தரித்து எழுதியிருக்கிறானே; படிக்கும் போதே நமக்கு ஒரு போதை தோன்றுகிறதே; அதை எழுதும்போது அவன் நிலை எப்படி இருந்திருக்கும்—இப்படியெல்லாம் எழுதுவது போன்ற கற்பனையை வாழ்நாளில் தத்ரூபமாக சந்திக்க வேண்டுமென்று விரும்பமாட்டானா? அந்த இன்ப விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் தவித்திருக்கமாட்டானா? அந்தத் தவிப்பின்போது ரோஜா கிடைக்காவிட்டால் ஒரு கனகாம்பரம்-என்ற அளவுக்கு தன் ஆசையை விரித்திருக்க மாட்டானா?"

என்றெல்லாம் அவனைப்பற்றிப் பேசினர்.

"ஆச்சரியம் தான்! நீ நினைக்கிறபடியோ, சந்தேகங்கொள்ளுகிறபடியோ, அந்த மேதை, வழுக்கி விழுந்து விடுகிறவனல்ல! நிச்சயம் அத்தகைய வழியில் அவன் இறங்கமாட்டான்" என்று உறுதியோடும் பலர் பதிலுரைத்தனர்.

"நல்லொழுக்கசீலன் என எப்படி நவில முடியும்? நாடுபல சுற்றியிருக்கிறான்?"

"ஏடு பல கற்றுமிருக்கிறான்—ஏன் அவன் சற்குணனாய் இருக்க முடியாது!" இப்படிக் கேள்வியும் பதிலும் மாறி மாறி!

"தான் எதிர்பார்த்து நடைபோடும், அந்த லட்சியம் கைகூடும் வரையில்; உலகத்திற்கு அந்த ஒப்பற்ற பரிசை வழங்கும் வரையில் அவன் திருமணமே செய்து கொள்ள மாட்டானாம்; பெண்களின் முகத்தைத் திரும்பிக் கூடப்பார்க்கமாட்டானாம்!"

இந்தப் பிரச்சாரமும் பரவியது அவன் அப்படிச் சொன்னானோ இல்லையோ; எல்லோரும் அப்படித்தான் நம்பிக்கொண்டிருந்தனர். அவன் சொல்லாததையெல்லாம் மக்கள் சொல்லுவர். அதைப்பற்றி புகழ்வர். அவனும் வழியின்றி, "ஆமாம், சொன்னேன்" என்று ஒத்துக் கொள்வான்.

"லட்சியம் கைகூடும் வரையில் உறங்கவும் மாட்டாராம்" இப்படி பிரச்சாரம் நடைபெறும். அன்பின் மிகுதியால் கிளம்பும் வதந்தி. அவனைப் போய்க் கேட்பர், "உங்கள் லட்சியம் கைகூடும் வரையில் உறங்க மாட்டீர்களாமே! ஆகா; என்ன உறுதி! என்ன உறுதி!" எனப் புகழ் பாடியபடியே!

"இல்லை—இல்லை – எனக்கு அப்படியெல்லாம் லட்சியத்தில் மோகமில்லை!" என்று அவனால் சொல்ல முடியும்? முடியாது. ஆகவே, 'ஆமாம் உறங்கமாட்டேன்' என்பான். அதற்காக தன்னைச் சுற்றியிருப்போர் தூங்கிய பிறகு நாற்காலியில் உட்கார்ந்தபடியே—எதையோ சிந்திப்பதுபோல தூங்கிக் கொண்டிருப்பான். பாவம்! அதுவும் அமைதியற்ற அரைத் தூக்கம்.

"நமது மேதை—நல்ல வேட்டி சட்டைகூட உடுத்துவதில்லை – அவருடைய எண்ணமெல்லாம் உலகத்திற்கு ஒரு புதிய வழி காணவேண்டுமென்பதிலேயே லயித்துக்கிடக்கிறது" என்பர் சிலர்!

"இல்லை-இல்லை-நான் ஆடம்பரமாக உடை உடுத்துவேன்." என்று அவன் கூறமுடியும்? முடியாதே; பாவம்! அதற்காக, நாற்றத்தையும் தாங்கிக் கொண்டு அழுக்கு ஆடைகளை உடுத்துவான்.

"பெரிய மகானுக்கும் நமது மேதைக்கும் என்ன வேறுபாடு! ஒன்றுமில்லை – பெண் என்றால் திரும்பியும் பார்ப்பதில்லையே இவர்!" என்று அதிசயமாக பேசுவர் பலர்.

"உம்—பெண்ணாவது மண்ணாவது!" என்று மேதையும் அவர்களோடு சேர்ந்து பேசுவான். பேசத்தானே வேண்டும் அவனுடைய பெருமையைக் காப்பாற்றிக் கொள்ள!

மேதை ஒருநாள் வெளியூருக்கு அழைக்கப்பட்டிருந்தான்; கல்லூரி ஒன்றிலே 'விஞ்ஞான

11-ம் பக்கம் பார்க்க


# தனி அரசு

●

மாதம் மூன்று முறையாக மே மாத முதல்
1, 10, 20 தேதிகளில் வரும்.

ஆசிரியர்: ஏ. வி. பி. ஆசைத்தம்பி


| | | |
|---|---|---|
| கட்டணம்(தபாலில்) | ○ | 1. பிரதி 1-க்கு 0–6–0 வீதம் தேவையான பிரதிகளுக்குத் தக்க முன் பணம் ஏஜெண்டுகள் அனுப்ப வேண்டும். |
| ஆண்டுக்கு ரூ 4–8–0<br>ஆறு மாதம் 2–4–0<br>மூன்று மாதம் 1–4–0<br>தனிப்பிரதி 2 அணா | அரசியல், பொருளாதாரம், சமுதாயம்! சிறக்கும், கருத்து, இனிக்கும் எழுத்து துப் புது அம்சங்களுடன் புத்துலகு பூக்க மலருகிறது.<br>○ | 2. ஏஜெண்டுகள் இல்லாதஇடங்களில் முன் பணம் அனுப்புவோருக்கு ஏஜென்சி தரப்படும். |

விபரங்களுக்கு: தனி அரசு, விருதுநகர்

6


# ★ ஆடிடு

தாயக் கட்டையை உருட்டுங்கள்-தாயம் விழுந்ததும் காயை முதல் கட்டத்தில் வையுங்கள். காய்க்கு, விழிப்பு என்று பெயர் சூட்டிக்கொள்ளுங்கள். பிறகு கட்டையில் விழும் எண்ணிக்கைக்குத் தக்கபடி காயை நகர்த்துங்கள். 29, 30, 31, 32, நாலு கட்டங்களில் மட்டும் ஒவ்வொன்றுக்கும் ஒரு தாயம் விழுந்தால்



# றை ★

காயை நகர்த்தலாம். இரண்டு பேராக ஆடும்போது பொழுது போக்
ம் இருக்கும்—இன உணர்ச்சிப் பிரச்சாரமாகவும் இருக்கும். பெண்களிடம்
பிரச்சாரம் புரிய இதுவும் ஒரு வழியல்லவா? விளையாடும்போதே
ளைப் பற்றிய :விளக்கங்களையும் கூறுங்கள்.



காமராசர்

# கல்லாதவராம் — கரகோஷமிடுகிறார்கள்!

மூன்றாம் வகுப்பு வரைபடித்த அதாவது பெரியார் படித்த அளவிலேயே) காமராசர், பதின் (மூன்று ஆண்டுகாலம் தமிழ்நாடு காங்கிரஸ் தலைமை வகித்து, அ. இ. காங்கிரஸ் கமிட்டியில் அங்கம் வகித்து, இப்போது இந்த ராஜ்யத்தின் முதன் மந்திரியாகவும் ஆகிவிட்டார் என்ற செய்தியை-அதாவது எப்படியாவது தமிழகத்துக்கு சொல்லித்தீர வேண்டியது என்று எண்ணுகிற அந்தச் செய்தியை கல்கி ஆசிரியர் அவர்கள் மிகவும் தந்திரமாக எப்போது காலம் வரும் என்று காத்திருந்து மிக அழகாகவும், அக்கிரகாரத்து தந்திர முறையை அனுஷ்டித்தும் தனது பத்திரிகையில் துணைத் தலையங்கமாக தீட்டியுள்ளார். அதிகாரமில்லாத காமராசரை ஒரு முறை கல்கியார், "பெரிய தலை-சின்னபுத்தி" என்ற கட்டுரையின் மூலம் தாக்கியிருந்தார். அப்போதெல்லால் ராட்டினம் சுற்றிக் கொண்டிருந்தார் காமராசர். அதனால் கல்கி சுலபமாக அவர்மீது பயமின்றிப்பாய்ந்தது. இப்போது காமராசர் நிர்வாக யந்திரத்தை சுற்றும் பொறுப் பேற்றுள்ளார். அதிகார பீடம் ஏறியுள்ளார். ஆகவே அக்கிரகாரத்துக்கு இயல்பாக எழும்பிய உணர்ச்சியின் காரணமாக, சமயம் பார்த்திருந்து பாஷாணத்தை வீசுகிறார் பத்திரிகை மூலம்! தஞ்சையிலே கல்லூரி தேவையா என்பது பற்றி எழுத வந்தவர்—காமராசர் படிக்காதவர் என்பதைஉலகுக்கு உணர்த்த அக்பரையும், ஐதரையும், நமது அய்யாவையும் தேடிப் பிடித்து திரை போட்டு மறைந்துகொண்டு திடீர்த்தாக்குதல் நடத்திக் காட்டுகிறார்.

எப்போதுமே, கல்கியார், கன்னத்தில் விழும் அடியை கனிவாகப் பெற்ற முத்தம் என்பார். 'காளியின் கருணை' பெற்ற கல்கியின் பேனா முனை நினைத்தபடி யெல்லாம் வளைய வல்லது. அத்தகைய வல்லமை பெற்றவர் தஞ்சையிலே கல்லூரி வேண்டாம் — வேண்டுமெனில் தொழிற் கல்லூரி நிறுவிடுக— என உபதேசம் செய்கிறார். பட்டக்கல்லூரி வேண்டாமென்பதற்கு அவர்காட்டும் உதாரணம் அக்பர் படித்தாரா? ஐதர் படித்தாரா? பெரியார் படித்தாரா? காமராசர் படித்தாரா? என்பவைதான். படிக்காமல் முன்னேறியவர்களுக்கு உதாரணம் காட்டி, வளரும் புதிய சமுதாயத்துக்கு குழிவெட்ட எண்ணும் கல்கியாருக்கு, 'விதி விலக்கு' என்று ஒன்று இருக்கிறதே; அது புரியாது போலும்! ராணுவத்தில் இருப்போர் எல்லோரும் நகீப்பாகவோ, நசீராகவோ ஆகிவிட முடியுமா? படிக்காதவரேல்லாம்

முடியுமா? கல்விக்கூடம் நுழையாத எல்லோரும் கர்மவீரர் பெரியாராக ஆகிவிட முடிந்ததா? அக்பரும் மற்றோரும் படிக்காத நிலையிலேயே பார்புகழும் வீராயினர் என்ற செய்தியை கல்கியார், சரித்திரத்திலே படித்துத்தானே தெரிந்து கொண்டிருப்பார்.

காமராசர் படிக்கவில்லை அதனால் மந்திரியானார் என்று கல்கி, கூறுமேயானால், காமராசர் கல்யாணமே செய்து கொள்ளவில்லை; அதனால் மந்திரியானார் என்றும் வாதிக்கக் கூடுமல்லவா?

ஆகவே கல்கியின் எழுத்தின் நோக்கம் அதுவல்ல—தஞ்சை கல்லூரி தேவையில்லை என்பதுமல்ல—

"கற்றவர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு" என்ற மொழியை படிக்காத வருமல்ல கல்கியார்! காமராசர் படிக்காதவர் என்பதை எப்படியாவது சொல்ல வேண்டும் — அதுவும் ஆபத்து வராமல் சொல்லவேண்டும்—வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ள ஒரு வாய்ப்பு வேண்டும்—அதற்காக தஞ்சையின் தலையிலே கல்கி கைவைக்கிறது!

தொழிற் கல்லூரி வேண்டாமென்போரல்ல நாம்—ஆனால் கல்கி, நல்ல எண்ணத்தோடு தொழிற் கல்லூரி கோரவில்லை. அரிகர அய்யரையும் ஆத்மநாத சாஸ்திரியையும், அமெரிக்கா ரஷ்யாவுக்கு அனுப்பிவிட்டு இங்குள்ள ஆண்டி மகன் குப்புவை வியர்வைக் குளத்தில் நீச்சலடிக்கச் செய்ய வேண்டுமென்ற ஒரே குறிக்கோளுடன் தொழிற் கல்லூரி தேவை யென்கிறது கல்கி ஏடு!

தொழிற்-கல்லூரியும், பட்டப் படிப்புக் கல்லூரியும் இரண்டுமே இருக்கக் கூடாதென்று எந்த விதி சொல்லுகிறது? எந்த நாட்டில் அந்த கல்லூரிகள் இரண்டுமே இல்லாமலிருக்கிறது? எல்லாம் தெரியும் கல்கியாருக்கு-தெரிந்தும் தவறு செய்கிறார்—காரணம்; காமராசர் கல்லாதவர் என்று கூற வேண்டும்—அதற்கு ஒரு கட்டுரை வேண்டும்—அந்தக் கட்டுரை முதன் மந்திரியை நேரடியாகத் தாக்குவதாயிருக்கக் கூடாது. ஜாடையாகத் தாக்க வேண்டும். அதற்காக தஞ்சையை தேடிப்பிடித்தார்-நஞ்சைக்கொட்டுகிறார். கக்கிய விஷத்தை காகபட்டர் கும்பல் திரும்ப விழுங்கிட வேண்டும் – இந்த எச்சரிக்கைக்குப் பிறகும் எரிமலையில் விளையாட விரும்பினால் அனுதாபமேதான் தெரிவிக்க முடியும் நம்மால்! பிறகு, காலம் விட்ட வழியில் எல்லாம் நடந்தே தீரும்.

கரகோஷ மிட்டார்களாம்!— ஆனந்தத்துடன் அந்தச் செய்தியை, அள்ளி வழங்குகிறது, மித்திரன் ஏடு!!

பண்டிதரோ, பாராளும் துணைத் தலைவர் ராதாகிருஷ்ணனோ, சச்சிவோத்தமரோ, சக்கரவத்தியாரோ, பேசிய பேச்சுக்கல்ல! நீதிக் கட்சித் தலைவர் பி. டி. ராஜனின் பிரசங்கத்துக்கு !!

ஆச்சரியத்துக் குரிய விஷயம் தானே? பி. டி. ராஜன், ஜஸ்டிஸ் கட்சியின் தூண், ஆண்டாண்டு காலமாக ஆதிக்க வெறியாம் பார்ப்பனீயத்தை விரட்டும்அரும் பணியை ஆற்றிவருபவர், அவர் பேசினார்!—பேச்சைப் போடுவதே, பெரிய விஷயம்—இப்போது, அவர் பேச்சைக் கேட்ட மக்கள், கரகோஷம் இட்டனர்—எனும் செய்தியையுமன்றோ, களிப்புடன் வெளியிடுகிறது.

ராமேஸ்வரத்தில் ஏப் 21ந் தேதியன்று தோழர் பி. டி. ராஜன் அவர்கள் பேசினாராம். அப்போது, மக்கள் கரகோஷம் செய்தனராம்! ஆச்சாரியாரின் அரசியல் நிர்வாகத்தைப் பற்றி எத்தனையோ முறை புகழ்ந்து பேசியிருக்கிறார்—அப்போதெல்லாம், அவருடைய செய்தியை வெளியிடும் அகமகிழ்ச்சியை விட, பெருமகிழ்ச்சியுடன் இந்தக் கரகோஷ விஷயத்தைத் தெரிவிக்கிறது!!

அவர், சொன்னாராம்—"காமராஜர் மந்திரிசபை நன்றாகஆட்சி நடத்தும்வரை, அதனை ஆதரியுங்கள். இல்லையேல், அடித்து விரட்டுங்கள்" என்பதாக.

"அடித்து விரட்டுங்கள்!"செய்தியைப் போட்டு, அதற்கருகில், (கரகோஷம்) என்பதனையும் வெளியிட்டிருக்கிறது.

வெளியிட்டது—தவறல்ல ஆனால், 'விரட்டி அடியுங்கள்,' என்பதை வெளியிடும் போது மட்டும், 'கரகோஷத்தை,'வெளியிட்டிருக்கிறது, ஏடு. கவனிக்கக் கோருகிறோம். கருத்து, புலப்படும்! மித்திரன் கூட்டத்து உள்ளமும் புலப்படும்!!

அந்தக் கூட்டத்தில், மக்கள் கரகோஷ மிடக்கூடிய இன்னும் பல விஷயங்களைப் பற்றியும், பி. டி. ராஜன் பேசியிருக்கிறார். புதிய கல்வித் திட்டம்—காங்கிரஸ் ஆட்சியின் கொடுமை—ஆகியவைகளைக் குறித்தும் விளக்கியிருக்கிறார். அவைகளைக்கூறும் போது, மக்கள் கைதட்டாமலா இருந்திருப்பர்? நிச்சயம் தட்டியிருப்பார்! நாம்தான் காண்கிறோமே, பொதுக் கூட்டங்களில்!

தமக்குப் பிடிக்காத கொடுமைகளை எதிர்த் தொழிப்பதாகக் கூறும் அரசியல் கருத்துக்களைக் கேட்கும் மக்கள், கரகோஷமிடு

பைத் தெரிவிக்கிறார்கள். அதன்படி பார்த்தால், அன்பரின் பேச்சுக்குப் பல முறை, கரகோஷமிட்டிருப்பார்கள், மக்கள்!

அந்தக் கரகோஷங்களை, எடுத்துப் போடவில்லை — 'விரட்டியடியுங்கள்,' என்ற வார்த்தைக்கு மட்டும், போட்டிருக்கிறது! கரகோஷமிட்டார்களாம் காமராஜரை விரட்டியடியுங்கள், எனக் கூறியதற்கு !!

'காமராஜர் ஆட்சிக்கு வந்துவிட்டார் — அது, தவறு! — ஆகவே, விரட்டியடியுங்கள்' என்றல்ல ராஜன் பேசியிருப்பது.

"நன்றாக ஆட்சி நடத்தாவிட்டால்...!", என்றும் கூறியிருக்கிறார். நன்றாக ஆட்சி நடத்தாவிட்டால், நிச்சயம் விரட்டியடிப்போம், என்று கரகோஷமிட்டிருப்பார்கள் மக்கள்; கடமையையும் நன்மையையும் எதிர்பார்க்கும் மக்கள், அப்படித்தான்செய்வார்கள்! அவ்வண்ணம் செய்வதைத்தான் அரசியல் நல்லோரும் விரும்புவார்கள் !!

ஆனால், மித்திரன், அந்த நோக்கத்தை ஆதரிக்கும் முறையில் அல்ல, செய்தியைப் போட்டிருப்பது. விரட்டியடியுங்கள்— என்றாராம், கரகோஷமிட்டனராம்.

அவ்வளவு, ஆசை—ஆட்சி நன்றாக நடக்கிறதா, இல்லையா என்பதைக் கண்காணிப்பதில் அல்ல; காமராஜரை, விரட்டியடிப்பதில்!

என்ன கஷ்டம், பாருங்கள், இவர்களுக்கு? ஒரு திராவிட மகன் அரசு பீடத்தில் அமர்வதைக் காணச் சகிக்கவில்லை! திகைக்கிறார்கள் !!

அரும்பு, மலருமுன்னே, தீ தாவத்துடிக்கிறது. இந்த அந்தரங்கத்தை அறிய வேண்டும், நமது சகோதரர்கள்—இன்னும், 'ஆரியமாயை'யை நம்புபவர்கள்!!


அறிஞர் அண்ணாவின்
புதிய வெளியீடுகள்

பவழ பஸ்பம் 0—4—0
பொன்னொளி 0—4—0

விற்பனை கழிவு 30 சதவிதம் கீழ்க்கண்ட முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

மு. கருணாநிதியின்
மனோகரா 0—8—0

சாமி கம்பெனி
183, மௌண்ட் ரோட்
சென்னை-2.

# சரித்திரம் திரும்பும்!

## சட்டசபையில் கோவிந்தசாமி!

★

கனம் உதவி சபாநாயகர் அவர்களே!

இந்த ஜெயில் மான்யத்தின் மீது நண்பர் கே. டி. ராஜு அவர்கள் கொண்டு வந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இன்றையதினம் ஆளுகின்ற காங்கிரஸ்காரர்கள் ஒரு காலத்திலே சிறையிலே இருந்தவர்கள்தான் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகின்றேன். நான் சொல்லுகின்ற அத்தனையும் உண்மை யென்றும் அதற்குப் பரிகாரம் தேடுவது அவசியம் என்பதும் அவர்களுக்கு நன்றாகத்தெரியும். அந்த காலத்திலே வெள்ளையர்களை குறை கூறத் தெரிந்தது; அவன் செய்த ஒவ்வொரு காரியத்தையும் குற்றம் சொல்லி வந்தார்கள். ஆனால் இன்று இவர்கள் செய்ய வேண்டியதையெல்லாம் காற்றில் பறக்கவிட்டு அந்த வெள்ளையர் இழைத்த அதே குற்றங்களைப் புரிந்து வருகிறார்கள். இன்று காங்கிரஸ்காரர்கள் ஆட்சி பீடத்தில் அமர்ந்த பிறகு வெள்ளையர் இவர்களுக்குத் தீங்கு இழைத்ததை யெல்லாம் திருப்பி எதிர்க்கட்சிக்காரர்களிடத்தில் அந்த பாடத்தையே படிக்கிறார்கள். எதிர்க்கட்சி அரசியல் கைதிகளை சிறையிலே சரியானபடி நடத்தாமல் ஏதோ ஆடுமாடுகளைப் போல் நடத்துகிறார்கள்.

பொதுஜன செல்வாக்குப் பெற்றும் ஒழுங்காகவும், கண்ணியத்தோடும் நடந்து கொள்ளும் அரசியல்வாதிகளை - அரசியல் கைதிகளை இன்னும் சரியாக நடத்தவில்லை. எதிர்க் கட்சிகளாகிய கம்யூனிஸ்ட்கட்சி, தி. மு. கழகம், திராவிடக் கழகம், பிரஜா சோஷியலிஸ்ட் கட்சித் தோழர்களை சிறையிலே நல்ல முறையில் நடத்தப்படவில்லை. நாளைக்கு ஒரு காலத்தில் இவர்களும் நாடாள வரலாம், வரப்போகிறார்கள் என்பதை ஆட்சியாளர்களாகிய காங்கிரஸ்காரர்கள்ஞாபகத்தில் வைக்கவேண்டும். "இன்றைக்கு எங்களுக்கு கிடைக்கும் கதிதான் நாளைக்கு உங்களுக்கும்" என்று இவர்கள் சொல்ல வேண்டுமா? அப்படிக் காலம் வந்தால் இவர்கள் பட்டுத்தானே ஆக வேண்டும். "யானை கொழுத்தால் வாழைத்தண்டு, மனிதன் கொழுத்தால் கீரைத்தண்டு" என்பதற்கிணங்க இந்த அரசாங்கம் அரசியல் கைதிகளின் புலத்தை ஒடுக்க கீரைத்தண்டை அடிக்கடி சிறைக் கைதிகளுக்கு போடுகிறார்கள். வேறு நல்ல உணவு கிடையாதா? மேலும் அவர்களுக்கு இருப்பு சட்டியில் குழம்பு காய்ச்சப்பட்டுக் கொடுக்கப்படுகிறது. ஒரு வேளை "அயர்ன் டானிக்" கொடுக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை! அவர்களுக்கு இரும்பு நாற்றமடிக்கும் இந்தப் பாத்திரங்களை உபயோகப்படுத்தாமல் பித்தளைப் பாத்திரங்களை ஏன்உபயோகப்படுத்தக்கூடாது? இதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.உணவு நெருக்கடி காலமாயிருந்தால் அவர்களுக்குகொடுக்கும் உணவு குறைவாக இருக்கலாம். ஆனால் இப்பொழுது கொடுக்கும்உணவு கூட போதாமல் இருக்கிறது. இன்னும் ஏன் களி உணவைக் கொடுக்க வேண்டும்?

மூட்டைப்பூச்சியால் அவர்கள் படும்பாடு சொல்லி முடியாது. அந்தக்கைதிகளுக்குபடுப்பதற்கு கிழிந்த சாக்குகளும், அழுக்குப் படிந்த கோணிகளும் கொடுக்கப் படுகின்றன. 5 பேர்கள் இருக்கும் இடத்தில் 10 பேர்களாக அடைக்கப் படுகிறார்கள். அங்கே மூத்திரக் குட்டையின் நாற்றம் மூக்கைத் துளைக்கும் ஒரு பக்கம். அவர்கள் மலஜலங்கழிக்க ஒரு மறைவான இடம் கிடையாததால் எல்லோரும் திறந்த வெளியில் போகும் கண்றாவிக் காட்சி... இந்த அரசாங்கம் செய்யும் சுகாதாரப் பணிக்கு! உதாரணமாக இருக்கிறது.

அரியலூரில் சப்ஜெயிலில் தோழர் கருணாநிதி படுத்துக் கொள்ள இடம் கூட இல்லாமல் கம்பியைப் பிடித்துக் கொண்டு தூங்கவேண்டிய நிலையில் இருந்தார். சிலர் உட்கார்ந்து கொண்டே தூங்கினார்கள். இப்படி இடமில்லாமல் கைதிகள் மிகவும் சிறையிலே கஷ்டப் படுகிறார்கள். மனிதனை உயிரோடு கொல்வதற்கு சப்ஜெயில்கள் இருக்கின்றனவோஎன்னவோதெரியவில்லை தோழர் கே.டி. ராஜு அவர்கள் சட்டசபையில் அங்கத்தினராய் இருந்துங்கூட சிறையில் சிலரை பார்க்கப் போவதற்குக்கூட அனுமதிக்கப்படவில்லை என்று சொன்னார். சட்டசபை அங்கத்தினர்களுக்குக்கூட இந்தச் சிறியசலுகைகள் அளிக்கப் படுவதில்லை. இதை கனம் அமைச்சரவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

இன்னும் சிறையிலே அரசியல் கைதிகளுக்கு பத்திரிகைகள் கொடுக்கப் படுவதில்லை. பாரபட்சம் காட்டப்படுறது. எதிர்கட்சிப் பத்திரிகைகளாகிய "தினத்தந்தி" யையோ, "விடுதலை" யையோ, "நம்நாடோ" அவர்களுக்குக் கொடுக்கப் படுவதில்லை எதற்காக இந்த பத்திரிகைகளெல்லாம் கொடுக்கப்படுவதில்லை? இவைகளெல்லாம் கொடுத்தால் ஜெயில் இடிந்தா போய்விடும்? அல்லது இந்த ஆட்சிதான் அழிந்துவிடுமா? அவர்களுக்குக் கொடுக்கப்படும் "சுதேசமித்திரன்" "தினமணி" களெல்லாம் சர்வகாலமும் அரசாங்கத்திற்குத் துதிபாடிக் கொண்டிருப் பதினால், இந்தப் பத்திரிக்கைகளை வரவழைக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. முன்பு நம்மை சிறையில் அடைத்தவர்கள் இப்பொழுது நமக்கு "செல்யூட்" போடுகிறார்கள் என்று காங்கிரஸ் மந்திரிகள் சந்தோஷப் படலாம். அன்று நமது காங்கிரஸ் தோழர்கள் சிறையிலே வதையும் போது "மோர்கூட கெடுப்பதில்லையே" என்றார்களே, இதைச் சற்றேனும் இன்றுசிந்தித்தார்களா? தூத்துகுடிக் வழக்கில் ஈடுபட்ட கே. வி. கே. சாமியின் தாய் மரணப் படுக்கையில் இருந்தார்கள். அவர்களைக் கடைசி தடவையாக பார்ப்பதற்கு "பெரோல்" கேட்டதற்கு உத்தரவு அளிக்கப் படாமல் மறுக்கப்பட்டது. அவர்கள் இறந்த பிறகும் அனுமதிக்கப்படவில்லை. ஆனால் கருமாதியை முடித்து வருவதற்கு மாத்திரம் அனுமதி கொடுக்கப் பட்டது. பெற்ற தாய்க்குசெய்ய வேண்டியஈமக்கடன்களைசெய்து விட்டு, கொடுக்க வேண்டிய காய்கறி, அரிசி, பருப்பு எல்லாம் கொடுத்துவிட்டு வரட்டும் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் நம் தோழர் திராவிட முன்னேற்ற கழகத்தைச் சேர்ந்த வராகையால் இரண்டாவதாகச் சொல்லப்பட்ட காரியத்தைச் செய்யவில்லை. இதனால் அவர்கள் ஏமாற்றம் அடைந்தார்கள்.

இவ்விதமாகஎதிர்க் கட்சிகளைச் சேர்ந்த அரசியல் கைதிகளை வெறுக்கத் தக்க மிக மோசமான முறையில் நடத்துகிறார்கள். தூத்துக்குடி, திருச்சி அரசியல் கைதிகளை கோர்ட்டிற்கு அழைத்துச்செல்லும்போது விலங்கிட்டு அழைத்துச் செல்லுகிறார்கள்.

இவ்வாறு அவமரியாதையான முறையில் அனுஷ்டிப்பதற்குக் காரணம் இந்தக் கைதிகள் எங்காவது ஓடி விடுவார்களோ என்பதற்காகவா? ஒரு லட்சியத்திற்காக பாடுபடும் இந்த இளைஞர்களை இவ்வாறு நடத்துவது நீதியா? நேர்மையா? நல்லாட்சிக்கு அழகா? என்று கேட்கிறேன். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தோழர் பாலதண்டாயுதத்தை சிறையிலே அடித்தார்கள் என்று கேள்விப்பட்டோம். இவர்கள் என்ன திருட்டுத்தனம் செய்தவர்களா, மது விலக்குச் சட்டத்தை மீறியவர்களா, ஏன் இவர்கள் அநியாயமாக இப்படி அவமரியாதையாக நடத்தப்படுவதும், அடித்துக் கொல்லப்படுவதும் என்று கேட்கிறேன். அன்று வெள்ளையர்களிடம் கற்றுக் கொண்ட பாடத்தைஇன்று நமக்குத் திருப்பிப் படிக்கிறார்கள். அவர்களைப் போலவே நம் கனம் மந்திரிமார்களும் "டீ" பார்ட்டிக்கு 'டான்ஸ்' பார்ட்டிக்கும் சென்ற வண்ணம் இருக்கிறார்களே ஒழிய சிறையில் வதைகிறவர்களை எந்த நிலையில் அவர்கள் இருக்கிறார்கள் என்று சிந்திப்பது கூட கிடையாது. ஏன் இவர்கள் வாரத்திற்கு ஒரு முறையாவது சிறைக் கைதிகளைப் பார்வையிடக் கூடாது? சிறையிலிருக்கும் அரசியல் அல்லாத மற்ற கைதிகளுக்கு நல்ல தொழில்களிலோ விவசாயத்திலோ பயிற்சி யளிக்கப்பட்டு அவர்கள் வெளியில் வரும் பொழுது ஒரு தொழிலைக் கற்றுக்கொண்டவர்களாக இருக்க வேண்டும். அந்த முறையில் சிறைச்சாலை சீர்திருத்தப் பட வேண்டும்.

சிறைச்சாலை எதிர்க்கட்சிக் காரர்களை பழி வாங்கும் இடமாக மாறக் கூடாது என்று பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். கனம் ஜெயில் மந்திரி மிகவும் நல்லவர். கனம் நிதி மந்திரியைப் போல கோபம் அடையக் கூடியவர்கள் அல்ல. மிகவும் பொறுமைசாலி, நிதி மந்திரி அவர்கள் கோபத்துடன் பதில் சொல்லுவார். ஆனால் ஜெயில் மந்திரி கோபப்படுபவர் அல்ல. இதோ நிதி மந்திரியும் நான் சொல்வதற்கு சிரிக்கிறார்கள். இவர்கள் மேற் சொன்னவைகளை சிந்தித்துப் பார்த்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு தோழர் கே. டி. ராஜு அவர்கள் கொண்டு வந்த வெட்டுப் பிரேரணையை ஆதரிக்கிறேன். ●

# அழகான வீணையா? ஆபத்தான நெருப்பா?

ஜன நாயகம்-ஒரு விளக்கம்

**அழகான வீணைதான்—அதை மீட்டுகிறவன் ஞான சூன்யமாயிருந்தால்?**

**நெருப்பு ஆபத்தானது—குளிரின் கொடுமையைப் போக்க அது உபயோகப்பட்டால்?**

எந்தச் சொல்லிலும், அதன் பெயரிலே மயங்கிவிடாமல் அது புரியும் செயலை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். உதாரணமாக — கும்பாபிஷேகம்—கொள்ளையடித்தல்—என்ற இரு வார்த்தைகளை எடுத்துக்கொள்வோம்.

பழைய கால மன்னர்கள் கட்டும் கோயில்களில் மூல விக்கிரகம் அமைப்பார்கள். இந்த ரகசியத்தை சில பெரிய மனிதர்கள் உணர்ந்திருப்பார்கள். அந்தப் பழைய காலத்து ஆலயத்தைப் புதுப்பித்து, ஜீர்ணோத் தாரண மகா கும்பாபிஷேகம்' நடத்தப் போகிறேன் என்று பெரிய வள்ளலைப்போலக் கிளம்புவார்கள். அவர்களுடைய குறியெல்லாம் மூல விக்கிரகத்தின் அடியிலே அந்த நாள் மன்னர் கொட்டியிருக்கும் நவரத்தினங்களின் மீதுதான். கோயில் பழுது பார்க்கும் வேலை நடைபெறும். அந்தப் பார்வையினுள்ளே மூல விக்கிரகத்தின் அடிப்பாகம் தோண்டப்பட்டு நவரத்தினங்கள், வள்ளல்களின் வீடுபோய்ச் சேர்ந்துவிடும். கிடைத்த லாபத்திலே—கால் பங்கு செலவிலே—கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெறும். "கொடைவள்ளலே! குணக்குன்றே!" எனப் பக்தர்கள் பாராட்டுவார்கள். கும்பாபிஷேகம் என்ற குளிர்ச்சியான சொல்லிலே திரை மறைவுக் கொள்ளை சுமுகமாக நடைபெற்று விடுகிறது. ஒரு சில கொள்ளைக்காரர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்களுக்குகொள்ளையடிப்பதே தொழில். கொள்ளைக்காரர் என்ற பகிரங்கப் பட்டமும் பெற்றவர்கள். அவர்கள் கொள்ளையடித்த பொருள்களை எல்லாம் ஏழைகளுக்கே பங்கிட்டுக் கொடுத்து அதில் ஓர் தனி இன்பம் கண்டிருக்கிறார்கள்.

இரண்டு வார்த்தைகள்—கும்பாபிஷேகம்—கொள்ளையடித்தல். கும்பாபிஷேகத்தின் பெயரால் கொள்ளை—கொள்ளையின் பெயரால், கும்பாபிஷேகத்தை விட சிறப்பான செயல்!

இப்போது—ஜனநாயகம் என்ற சொல்லைப்பற்றி யோசிப்போம்! ஜனநாயகம்—சர்வாதிகாரம்—கும்பாபிஷேகம்—கொள்ளையடித்தல்-இந்த வார்த்தைகளையும் பொருத்திப் பார்ப்போம்.


ஜனநாயகத்தின் பெயரால் சர்வாதிகாரம் தலைவிரித்தாடும் நாடுகள் எத்தனையோ உண்டு! வெகு தூரம் போவானேன்; இந்தியாவிலே எத்தனை ஆதாரம் வேண்டும் அதற்கு! சட்டசபையிலே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு மதிப்பு கொடுப்பது தன்னிஷ்டத்தைப் பொறுத்ததுஎன சென்னை மந்திரியார் ஆச்சாரியார் கூறவில்லையா?

மக்களால்தோற்கடிக்கப்பட்டவர்களும், மக்கள் முன்பு தேர்தலின்போது நிற்காதவர்களும், கொல்லைப்புற வழியாக மந்திரி நாற்காலிகளைப் பிடித்துக் கொள்ளவில்லையா? திருவாங்கூர் கொச்சியிலே ஜனநாயகச் சிசு துடிக்கத் துடிக்க கொல்லப்படவில்லையா?

ஜனநாயகம் இன்பமானசொல். அதிலே நஞ்சு கலப்போரும், அந்தச் சொல்லை வைத்துக் கொண்டு போலி நாடகமாடுவோரும் உலகிலே பல நாடுகளில் காணப்படுகிறார்கள்.

இங்கிலாந்தில் சார்லசின் தலையை வெட்டி எறிந்து கிராம்வெல் நடத்திய பார்லிமெண்டு ஆட்சி சிறிதுகாலம் நடைபெற்று மீண்டும் அரசுரிமைக்கு இடம் ஏற்பட்டு, அரசனின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தி பார்லிமெண்டு நாட்டையாளத்தொடங்குகிறது. ஆனால் அந்தப் பார்லிமெண்டுமக்களின் பிரதிநிதித்வம் பெற்றதாகவா இருந்தது! கேட்கும்போது சுவையாகத்தானிருக்கிறது. அரசனின் அதிகாரத்தை பார்லிமெண்டு கட்டுப்படுத்திவிட்டது என்ற செய்தியை! ஆனால் அதனுள் மறைந்து கிடக்கும் உண்மை மகா பயங்கரமானதாயிருக்கிறதே! 1793 ம் ஆண்டு இங்கிலாந்திலேயிருந்த காமன்ஸ் சபையில் 306 உறுப்பினர்கள் இருந்தார்களாம். அவ்வளவு பேரும் மொத்தம் 160 வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்களாம். 306 பேர் 160 பேரால் தேர்ந்தெடுக்கப்படுவது எவ்வளவு ஆச்சரியம் என்கிறீர்களா? அதாவது 17-ம் நூற்றாண்டில் நடந்த ஆச்சரியம்-இதோ 20-ம் நூற்றாண்டில் யாராலுமே தேர்ந்தெடுக்கப்படாதவர்கள் மந்திரிகளாக வருகிறார்களே—ஜனநாயக ஆட்சியின் பெயரால் இந்தியாவில்! இது எத்துணை மகத்தான ஆச்சரியம்! கும்பாபிஷேகம்செய்துகொள்ளையடிப்பதைவிட பெரிய ஆச்சரியமல்லவா இது!

கும்பாபிஷேகத்தையும் ஜனநாயகத்தையும் ஒன்றாகஒப்பிட்டு விட்டேனேயென்று கருதுகிறீர்களா? கும்பாபிஷேகம், நல்ல எண்ணத்தோடு செய்யப்படுவதும் பக்தர்களால் பாராட்டப்படுவதும்கூட உண்டு! நாம் ஆராயப் புகுந்தது கும்பாபிஷேகத்தின் தன்மையை அல்ல! அதை நடத்துவோரின் குறிக்கோளைத்தான். பக்தர்களுக்கு இனிப்பான வார்த்தை நாசகாரர்களின் நாடகத்திற்கு பயன்படுகிறது.மக்களுக்கு இனிப்பான 'ஜனநாயகம்' என்ற வார்த்தை மதோன்மத்தர்களால் பாழ்படுத்தவும் படுகிறது. அழகான மலர் மாலையைப் பிய்த்தெறியும் மந்தியும் உண்டு. காதலியின் கழுத்திலே அணிந்து களிப்படையும் காதலனும் உண்டு. மாலையின்நிலையிலேஜனநாயகமும்மந்தியின்நிலையிலே ஆட்சியாளரும் இருந்துவிட்டால் அந்த ஜனநாயகம் யாருக்குப் பயன்படமுடியும்!



ஜனநாயகத்தின் பெயரால் கொடுமைகள் நடந்து விடுகின்றன. உதாரணம் சுலபமான உதாரணம்—உள்ளங்கை நெல்லிக்கனி போன்ற உதாரணம்—இந்தியா!

சர்வாதிகாரத்தின் பெயரால் நன்மைகள் மலர்வதும் உண்டு! கொள்ளைக்காரன் ஏழைகளுக்கே உதவுகிறான் என்று பார்த்தோமே—அதுபோல!

தோட்டத்து மலர்கள் அத்தனையும் ஒருவனே பறிப்பது-பறிக்க உரிமை கொண்டாடுவது பறித்த மலர்களை இப்படித்தான் கசக்கி எறிவேன் என்பது - சர்வாதிகாரம் என்றால், அப்படி ஒருவனே, பறித்த மலர்களை பாங்கான மாலையாக்கி, மக்கள் மன்றம் என்ற எழிலோவியத்திற்கு அணிவிப்பது சர்வாதிகாரத்துடன் ஒட்டியிருக்கும், நல்லெண்ணம் நிறைந்த ஜனநாயக உணர்ச்சி என்றுதான் கூறவேண்டும்.

இந்த சர்வாதிகாரம் என்ற வார்த்தையை கொள்ளையடித்தல் என்ற வார்த்தையோடுகூட ஒப்பிடுவதுதவறுதான்! விளக்கம் தெளிவாக இருக்கவேண்டுமென்பதற்காக அந்த உதாரணத்தைக் கையாள நேரிட்டது.

மக்கள்தான் ஜனநாயகத்தை தோற்றுவிக்கிறார்கள். சில சமயங்களில் அவர்களும் அதை அழித்து விடுகிறார்கள். 'நாங்கள் வெட்டிய கிணறுதானே! ஆளுக்கொரு கல்போட்டு தூர்த்து விடுகிறோம்' என்று கூறுகிற அறியாமையை ஒத்ததாகும் இது. 'நாம் வெட்டிய கிணறுதான். ஆளுக்கு ஒரு குடம் தண்ணீர் எடுக்கத்தான் உரிமையிருக்கிறது - கல்போட எண்ணுவது தவறு - அதற்கு உரிமையளிக்கவும் கூடாது' என்ற அறிவுரையுடன் கற்களைத் தடுப்பதற்காக கிணற்றின் மீது இரும்பு வலை போடுவதும் உண்டு. அந்தத் தற்காப்பு வலை சில நேரங்களில் சர்வாதிகாரம் போன்று தோன்றினாலும் அது ஜனநாயகக் கிணற்றைக் காப்பாற்ற பெரிதும் பயன்படுகிறது. ஜனநாயகத்தைக் காப்பாற்றும் இந்த முறையைத்தான் வருங்காலத்தில் ஜனநாயக ரீதியில் நாடாளப்போகிற திராவிட முன்னேற்றக் கழகம், அதன் பொதுச் செயலாளர் மூலம் கடைப்பிடித்து நிற்கிறது. இந்தியாவின் ஆட்சியாளரும் ஜனநாயகக் கிணற்றைப் பாதுகாக்கிறார்கள். கிணற்றின் உள்ளே கல் விழாமல் இரும்பு வலை போட்டல்ல! பெரிய இரும்புத் தகடே போட்டு மூடியிருக்கிறார்கள்; கிணற்று நீரை யாரும் மொண்டு விடாமலும் - கிணற்றுக்குள்ளே சூரிய ஒளியும்-காற்றும் சென்று விடாமலும் பார்த்துக் கொள்வதற்காக!

பாவம் - ஜனநாயகம் மூச்சு விடமுடியாமல் அரியலூர் சப் ஜெயில் கூண்டுக்குள்ளே அகப்பட்ட கைதி போலத் தத்தளிக்கிறது; இந்த அகிம்சா ஆட்சியாளரின் கையில் சிக்கிக்கொண்டு!

கல் விழாமல் தடுக்கின்ற இரும்பு வலை போன்ற சர்வாதிகாரமும்,தோண்டியவர்களுக்குத் தண்ணீர் வழங்குகின்ற கிணறு போன்ற ஜனநாயகமும் ஒன்றோடொன்று இணைவதில் தவறில்லையென்பதுதான் நாம் தேர்ந்தெடுக்கும் முடிவாயிருக்கிறது. ஜனநாயகத்தைப் பாதுகாக்கிற சர்வாதிகாரம் - பூந்தோட்டத்திற்கு வேலிபோல!

ஆனால் 'வேலியே பயிரை மேய்வது' என்ற பழமொழி பலித்துவிடாமல் கண்ணுங் கருத்துமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

○

" ஆறு மாதக் கடுங்காவல் " புத்தகத்துக் கட்டுரை இது. ஃ

# பசுக்கை மிஞ்சிய 'வார்தா வர்க்கம்'!

வறுமைப் படுகுழியிலே வீழ்ந்து—ஆதிக்க சக்திகளுக்கு பலியாகிவிட்ட தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்களைக் கவனிக்க சென்னை அரசினர் 90—லட்ச ரூபாய் ஒதுக்கியுள்ளனர். முற்போக்கு இயக்கத்தினர் புன்னகை பூக்கின்றனர் காந்தி பக்தர்களின் காருண்ய செயல் கண்டு! அதே நேரத்தில் திடுக்கிடும் செய்தி சொல்லி நம்மையெல்லாம் வியப்பெய்தவைக்கிறது பிளிட்ஸ் ஆங்கில இதழ்! ஹரிஜன க்ஷேம நிதியின் 90 லட்ச ரூபாயில் 67-லட்ச ரூபாய்களை அலுவலகச் செலவுகள் சாப்பிட்டு விட்டதாம்! அதாவது முக்கால் பங்கை ஆபீசிலுள்ள மேஜை நாற்காலிகளும்-அலவன்சுகளும் சாப்பிட்டிருக்கின்றன! புண்யபாரதத்திலே இந்த விசித்திரமான சம்பவம் கூசாமல் நடைபெற்றிருக்கிறது!

இங்கே கிராமத்தின் பொதுக் கிணற்றிலே தண்ணீர் இமுக்க தாகத்தால் தவிக்கும் ஏழை ஆதித்திராவிட மகன் அனுமதிக்கப்படவில்லை; சனாதனப் பாசி அவனைச் சருக்கிவிடுகிறது. 'அங்கே மலானின் மண்டைக் கர்வத்தைப் பாரீர்! இந்தியர்களை ஒதுக்கிவைக்கும் அக்ரமத்தை என்னென்பது' என்று இடியோசை எழுப்புவோர் க்ஷேம நிதியின் முக்கால் தொகையை விரயம் செய்திருக்கிறார்கள், அலுவலகத்தின் ஊதாரிச் செலவுகள் மூலமாக!

பத்தாயிரம் சட்டைகள்—பாரெங்கும் தேடினாலும் பார்க்கக்கூடக் கிடைக்காத வைரமணிகள் பதித்த பொடி டப்பா—இப்படி பொற்காசுகளை வாரி இறைத்து உல்லாச ஓடையிலே ஒய்யாரமாய் மிதந்த பசுக் சிரிக்கிறான்-அவன் கூட தோற்றுவிட்டான் வார்தா வர்க்கத்தினரின் 'எளிய' செலவுகள் விஷயத்தில்!

காந்தியார் அணிந்த காந்தி படர்ந்த கதர், அழுக்காகி விட்டது—காமராசர் இந்த அழுக்கைத் துடைப்பாரா? ∴

## பாக்கெட்டுக்குள் !

●

பெரிய வழக்கொன்றில் ஒரு கட்சிக்கு சி.ஆர்.தாசும் எதிர்தரப்பில் நார்ட்டன் துரையும் வழக்காடினர். நார்ட்டன், சில சமயங்களில் துடுக்கான வார்த்தைகளைச் சொல்லி விடுவாராம். சி. ஆர். தாஸ் வாதம் செய்து கொண்டிருக்கையில் நார்ட்டன் எழுந்து, "மிஸ்டர் தாஸ்! ரொம்பப் பேச வேண்டாம். உம்மை, என் சட்டைப் பாக்கெட்டுக்குள் போட்டுக் கொள்வேன்" என்று துடுக்காகச் சென்னார். உடனே, தாஸ், "அவ்விதம் செய்வீரானல் உம்முடைய மண்டையைவிட உமது பாக்கெட்டிற்குள் அதிக மூளையிருக்கும்!" என்றாராம்.

## "தீச்சுடர்"

ஆசிரியருக்கு உடல் நலமின்மையாலும், பதிவு எண், அஞ்சல் சலுகை கிடைக்காத காரணத்தாலும் ஏப்ரல் திங்களில் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த 'தீச்சுடர்' மே திங்கள் முதல் வாரத்திலிருந்து வெளிவரும்.

## கருணாநிதி நிகழ்ச்சிகள்

மே—1. சேலம்
,, 2 ,,
,, 8 ஆரணி
,, 12 சென்னை (ஆர்பர்)




## புகழேந்தி...

5-ம் பக்கத் தொடர்சி

அறிவு' என்ற தலைப்பிலே சொற்பொழிவு நிகழ்த்துவதற்காக! கல்லூரித் தலைவரின் வீட்டிலேயே தங்கியிருந்தான். யாரும் தொந்திரவு கொடுக்காமலிருப்பதற்காக தனியாக மேல் மாடியில் மேதைக்கு இடவசதி செய்து கொடுத்திருந்தார் கல்லூரித் தலைவர். கல்லூரியில் மேதையின் சொற்பொழிவு நடைபெற்றது. விஞ்ஞானத்தின் பெருமைகளை அவனுக்கே உரிய அழகு நடையில் அவனல் மட்டுமே விளக்க முடியும் என்ற அத்தனை பெரிய கருத்துக்களை மாணவரிடையே வாரியிறைத்தான் மேதை. கூட்டத்திலே மாணவிகளும் அதிகமிருந்தனர். அந்த முல்லைக் கொல்லையின் நடுவே அழகு ரோஜா ஒன்றுமிருந்தது. மேதையின் பேச்சையும், அவனது கட்டுக்குலையா மேனியின் அழகையும் அந்த ரோஜாப்பூ தன்னிரு செவிகளாலும், விழிகளாலும், முறையே விழுங்கிக் கொண்டிருந்தது. மேதையின் பார்வையும் இரண்டொரு முறை அந்த அழகியின் மீது பாய்ந்தது. ஆனல் பாய்ந்த வேகத்தில் மீண்டது. அவன் அவளை லட்சியம் செய்ததாக காட்டிக்கொள்ளவில்லை. சொற்பொழிவு முடிவுற்றது. மேதையை மாணவர் சூழ்ந்து கொண்டனர். அனைவரிடமும் பேசிவிட்டு மேதை, கல்லூரித் தலைவரின் வீட்டுக்குப் புறப்பட்டான். உணவு முடிந்த பின்னர் அமைதியை விரும்பி, மேதை மாடிக்குப் போனன். மாடியில் உலவிக் கொண்டிருந்தான். நல்ல நிலவு. உலவிக் கொண்டிருந்தவனுக்கு கால்வலி எடுக்கவே நாற்காலியில் அமர்ந்தான். மேதையைக் கவனிப்பதற்காக அமர்த்தப்பட்டிருந்த பையன் ஓடிவந்து, மேதையின் கால்களை அமுக்கி விட்டான். மேதையின் வலிகண்ட கால்கள் பையனின் பணிவிடையால் சுகம் பெற்றன. மேதையின் கண்கள் கட்டவிழ்த்துக்கொண்டு இங்குமங்கும் திரிந்தன. எதிர்த்த வீட்டு மாடியிலே, கல்லூரியிலே கண்ட அந்த ரோஜா நின்றுகொண்டிருந்தாள். அவள் மேதையையே பார்த்துக் கொண்டுமிருந்தாள். அவள் கண்களிலேயிருந்து புறப்படும் அந்தக் காதற்கணைகள் எவ்வளவு சக்தி வாய்ந்தவை! ஆனல் அவைகள் மேதையை அசைக்கவும் முடியாதவை என எண்ணித் தவித்தாள் அந்த ரோஜா! மேதைக்கு, கால் அழுத்திவிட்ட பையன் வேலை முடிந்து வெளியே போனன். போனவன் எதிர்த்த வீட்டு மாடிக்கு எப்படிப் போனனே தெரியவில்லை. அந்த மாடியைப் பார்த்துக் கொண்டிருந்த மேதையின் கண்களிலே ஒரு காட்சி தெரிந்தது.

●

**தனக்கு கால் பிடித்த பையன்** எதிர்த்த வீட்டிலே அந்தக் கல்லூரி ரோஜாவுடன் ஏதோ பேசுகிறான். அவளும் மெதுவாக ஏதோ கூறுகிறாள். பிறகு அந்தப் பையனுடைய கைகளை எடுத்து கண்களிலே ஒத்திக் கொள்கிறாள்.

●

அந்தக் காட்சியை மேதை கண்டான். "லட்சியம் ஈடேறும் வரையில் பெண்களை திரும்பியும் பாரார்! திருமணமும் வேண்டார்!" என்று ஊரார் உலகத்தார் பேசிய புகழ் உரைகள் அவர் காதில் ஒலித்தபடியிருந்தன.

மறுநாள் காலையில் பையன் வந்தான், அவருக்கு காலைப் பணிவிடைகள் புரிவதற்காக! அப்போது மேதை அவனிடம் கேட்டார், "நேற்றிரவு அந்தப் பெண் உன் கைகளை கண்களில் ஒத்திக்கொண்டாளே, ஏன்?" என்று! "நான் உங்கள் கால்களைப் பிடித்தேனல்லவா; அதனல் என் கைகள் மிகவும் பாக்கியம் செய்த கைகளாம்; அதனல் என் கரங்களை அவள் கண்களில் ஒத்திக் கொண்டாள்" என்று பையன் நிலைமையை விளக்கினன்.

மேதை ஒன்றும் பதில் சொல்லவில்லை. நினைத்துக் கொண்டார், "நான் அவள் கால்களையே கண்களில் ஒத்திக் கொள்ளத் தயாராயிருக்கிறேன், அவளோ, என் காலில்பட்ட உன் கரங்களை முத்தமிடுகிறாள்—நல்ல புகழப்பா இது; பொல்லாத புகழ்; என்னைக் கொல்லாமல் கொல்லுகிறது" என்று அவர் ஆயிரம் முறை தனக்குள்ளாகவே முணு முணுத்துக் கொண்டார்!

அதற்குள்ளாக அந்தப் பெண்ணும், எதிர் வீட்டு மாடியில் உதயமானள். மேதையை வழியனுப்புவதற்காக ஐம்பது மாணவரும், ஆசிரியர் பத்து பேரும் மாடிக்கு வந்து விட்டார்கள். மேதை, எதிர் வீட்டு மாடியை ஏறெடுத்தும் பாராமல் காரியங்களை முடித்துக்கொண்டு ஊருக்குப் புறப்பட்டார்!

"மேதை வாழ்க!" என்ற முழக்கத்துடன் மாணவர்களும் ஆசிரியர்களும் கலைந்தார்கள். ∴

விரைவில் ஆரம்பமாகிறது

?

மு. க. வின் புதிய தொடர் கதை

# கடைசிப்பக்கம்

(?) தினத்தந்தி குருவியாருக்கு "சந்துமுனைசிந்து" என்றால் அர்த்தம் தெரியாதா? கிண்டல் செய்து எழுதியிருக்கிறாரே; 'கடபுடா' தமிழ் என்பதாக; அது ஏன்?

தமிழைப்பற்றி குருவிகளுக்கு என்னதெரியும். குருவித்தலையில் பனங்காயை வைத்தால் அது தாங்குமா? சந்துமுனைசிந்து என்று குருவியாரின் அங்காடி பாஷையைப் போன்ற பாஷையைத்தான் குறிப்பிடுவது. சந்து முனை என்றால் தெருக்கோடி—சிந்து என்றால் பாட்டு—தெருக்கோடியிலே இழிவான வார்த்தைகளைப் பேசி சண்டையிட்டுக் கொள்வார்களே அதைத்தான் அழகாக குறிப்பிடுவது "சந்து முனை சிந்து" என்று!

(?) "அந்த நாள்" படத்தைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

அருமையான முயற்சி. புதிய பாதை. ஆனால் மற்ற பட முதலாளிகளை பயமுறுத்துகிற தோரணையிலே அந்தப்பாதையை அமைத்துவிட்டார்கள், "ரோடு கான்ட்ராக்டர்கள்"! தோழர் மாருதிராவின் ஒளிப்பதிவு, தமிழ் நாட்டின் திரை உலகம், வடநாட்டுத் திரை மண்டலத்திற்கு விடுக்கும் அறைகூவலாகும். திரு மெய்யப்பா அவர்கள் ஜப்பான் படமான 'ரோஷமான்' போல ஒரு படமெடுக்க விரும்பினார். விருப்பத்தை கதாசிரியரிடம் வெளியிட்டார். 'அவாள்', ஜப்பான்காரன் முறையைப் பின்பற்றி எடுத்த படத்திலே ஜப்பான்காரனையே திட்டுகிற சம்பவத்தை இணைத்து பேஷாகவும் திவ்யமாகவும் படமெடுத்து விட்டார்கள். நாமெல்லாம், பெரியார் பெயரை, அண்ணா பெயரை, ஸ்டாலின் பெயரை படங்களில் புகுத்தினால் அது பிரச்சாரமாம். அவர்கள் மட்டும் சங்கரர், ராமானுஜர் பெயர்களை புகுத்தலாமாம்! அது பிரச்சாரமில்லையாம். இந்த நாளையொட்டி அந்த நாளை நமது மெய்யப்பா அவர்கள் சித்தரித்திருந்தால் பெரிய வெற்றி கிடைத்திருக்கும். ஆனால், இந்த தோல்வியினால் சளைத்துவிடாமல் மேலும் இதுபோன்ற முயற்சியில்வெற்றிபெற வாய்ப்பு இருக்கிறது என்பது மட்டும் யாரும் மறுக்க முடியாத உண்மை.

(?) பண்டித நேரு யாரைப் பார்த்து "பைத்தியக்காரர்" என்று சொன்னார்?

இது தெரியாதா? நிலைக் கண்ணாடியைப் பார்த்துத்தான்!

(?) மற்றவர்களைபைத்தியக்காரர் என்று கூறுவதால் என்ன லாபம்?

லாபமில்லை; நஷ்டம் தான்! யாராவது ஒருவன் கல்லால் அடித்து விடுவதாக வைத்துக் கொள்வோம். அவன் மீது வழக்குத் தொடுத்தால் அவனது வக்கீல் கீழ்க்கண்டவாறு வாதிடுவார்:

'குற்றவாளி ஒரு பைத்தியக்காரன் என்று வாதியே முதலில் கூறியிருக்கிறார். ஆகவே சித்த சுவாதீனமின்றி செய்த காரியத்தை பெரிய குற்றமாக எடுக்கக் கூடாது. உதாரணமாக—திருச்சியிலே கணவனை இன்ஸ்பெக்டரைக் கொலை செய்த விஜயலட்சுமி, பைத்யக்காரி என்பது நிரூபிக்கப்பட்டால் விடுதலையாகி விடுவதற்கோ, அல்லது தண்டனை குறைவதற்கோ வழியிருக்கிறதே!'

(?) திருச்சியிலுள்ள ரேடியோ நிலையத்தை மதுரைக்கு ஏன் மாற்றுகிறார்கள்?

மதுரையில்தான் தமிழ்ச்சங்கமும், சங்கப் பலகையும் இருந்தது என்ற வரலாற்றை இப்போதுதான் புரிந்து கொண்டிருப்பார்கள். ஆகவே தமிழின் அடித்தளத்தையே பெயர்த்து எறிந்து விடலாமென்று மதுரைக்குப் படையெடுக்க உத்தேசித்திருப்பார்கள்.

(?) தில்லையில் நடைபெற்றஎழுத்தாளர் மாநாடு சரியாக நடக்கவில்லையென்று ஆனந்த விகடன் எழுதியிருக்கிறதே; பார்த்தீர்களா?

நாமென்ன பார்ப்பது—மாநாட்டின் லக்ஷணத்தையே நேரு அவர்கள் நேரில் பார்த்ததால் தான் எதிர்ப்பு சக்திகள் மீது சீறி விழுந்திருக்கிறார்.

(?) குன்றக்குடி அடிகளைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

பார்ப்பனீயம் யாரிடம் குடி கொண்டிருந்தாலும், அது குப்புசாமி அய்யராயிருந்தாலும், குன்றக்குடி அடிகளாயிருந்தாலும் நாம் வெறுத்திட்டத்தான் செய்வோம். சேக்கிழாரை கம்பரை எதிர்க்கிறோம்; ஆரியர்கள் என்பதால் அல்ல—அவர்கள் ஆரியரும் அல்ல—ஆரியப்பண்பு கொண்டோர் என்பதற்காக! வ. ரா. வை ஆதரிக்கிறோம்; அவர் ஆரியப்பண்பிலிருந்துவிடுபட முனைந்தார் என்பதற்காக! அடிகளார் ஆரியத்துக்கு அடிமைப்பட்டால் அவரும் ஒரு ஆரியரே எனக் கருதப்படுவார். அந்த மாயையிலிருந்து விலகுகிறவர் அனைவரும் அறிவுலகத்தின் தூதுவர்கள்—அதில் அட்டியேதுமில்லை.

(?) மக்களுக்கு துரோகம் செய்துவிட்டு மந்திரிகளாகிறார்களே; அவர்களைப் பற்றி அவர்களின் குடும்பம் என்ன நினைக்கும்?

தாய் தந்தை நினைப்பர்; தங்கள் மகன் மந்திரியாகிவிட்டான்—நாம் மந்திரியின் பெற்றோர் என்று!

மனைவி சொல்லுவாள்; "மந்திரியின் துணைவியாக்கும் நான்" என்று!

மகன் சொல்லுவான்; "அய்யோ எதிர்காலத்தில் என்னை துரோகியின் மைந்தன் என்று நாடு தூற்றுமே," என்று! ○○

## தூக்கு சம்மட்டி...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தேதியை உலகமெங்கும் உள்ள தொழிலாளர் வர்க்கம் தங்களது முக்கியத்துவம் வாய்ந்த எட்டு மணி நேர வேலைக் கோரிக்கைக்காக போராடும் போராட்ட தினமாகக் கொண்டாட வேண்டுமென்று அறிக்கை விட்டது.

மதப் பள்ளிக்கு அனுப்பப்பட்ட இங்கர்சால் பின்னர் பகுத்தறிவு புரிக்கு பாதை வகுத்துக் கொடுத்ததைப்போல—ஈவு இரக்கமின்றி துப்பாக்கி பிடித்து இரணகளத்தில் போராடிய லயோலா பின்னர் பரிவுமிக்க பாதிரியாகி கிறித்துவ மதத்தின் தூணாக மாறியதைப்போல முதலாளித்துவம் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் அமெரிக்க பூமியில்தான் எட்டு மணிநேர இயக்கம் ஆரம்பித்தது—அங்குதான் மே தினத்தின் அஸ்திவாரம் போடப்பட்டது.

இந்தியாவிலேயே பார்ப்பனீயம் தலைவிரித்தாடும் தென்னாட்டில்தான் பார்ப்பன—எதிர்ப்பு இயக்கம்வலுவடைந்திருக்கிறது—ஆங்கில நாடு சென்று கற்றுத் திரும்பிய காந்தியால்தான் பின்னர் ஆங்கில ஏகாதிபத்யத்தை எதிர்க்க முடிந்தது; அதேபோல முதலாளித்துவத்தின் ஆதிக்க சக்தி முழுதும பலியான அமெரிக்காவால்தான் முதன்முதலாக எட்டுமணி நேர வேலை இயக்கத்தைத் துவங்க முடிந்தது. 'எட்டு மணி நேரவேலை; எட்டு மணி நேர பொழுதுபோக்கு; எட்டு மணி நேர ஓய்வு' என்று கோஷம் எழுப்பி மேதினத்திற்கு புதுமெருகு கொடுத்தது ஆஸ்திரேலிய தொழிலாளர் இயக்கம்.


இருபதாம் நூற்றாண்டின் ஜனநாயக நாடுகள் ஒவ்வொன்றும் எட்டு மணி நேரம்தான் தொழிலாளிவர்க்கம் உழைக்க வேண்டும் என்று சட்டமியற்றிவிட்டன. எனவே இன்று மே தினம் தொழிற் சங்கத்தின் உரிமைகளைப் பாதுகாக்கும் தொழிலாளர் தினமாக மாறிவிட்டது.

இந்த ஆண்டின் மே தினத்தில் உலக சமாதானத்தை அடைய தொழிலாளிவர்க்கம் பாடுபடவேண்டுமென்று அறிவிக்கிறது ஒரு தொழிலாளர் ஸ்தாபனம்.

அகில உலகத்தை 'டெலஸ்கோப்' கொண்டு பார்க்கு முன்னர் திராவிடர் இயக்கம் தென்னாட்டு பாட்டாளிவர்க்கத்திற்கு கீழ்க்கண்ட செய்தியைத்தான் சொல்ல விரும்புகிறது:

"டால்மியாவின் சிமெண்ட் தொழிற்சாலையிலும்—நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்திலும் தொல்லைப்படும் திராவிடத் தோழனே! "பேக்டரி"யின் ஜன்னலின் வழியே உன் திருவிடத்தைப் பார்! நீ அடித்துத் திருத்தி சரி செய்த இரும்புச் சங்கிலியால் டெல்லி ஏகாதிபத்யம் உன் மாதாவைப் பிணைத்திருக்கும் கொடுமையை எப்படித்தான் சகிப்பது? தூங்கி வழியும் சிங்கக் குருளையே! திராவிடத் தோழனே! தூக்கு உன் சம்மட்டியை; தினவெடுக்கட்டும் உன் தோள்கள்; தூள்தூளாகட்டும் உன் அன்னையின் தளைகள்!"


# மூக்கு கண்ணாடிகள்



கண் குளிர்ச்சிக்கும் கண் பார்வைக்கும் எல்லாவிதமான உயர்தர கண் கண்ணாடிகளும் புது மாதிரியான பிரேம்களும் உத்தரவாதத்துடன் கிடைக்குமிடம்:

**ராமன் ஆப்டிக்கல் அவுஸ்**

286, சைனாபஜார் (அப்பா பில்டிங்)

சென்னை-1.


'சோமு' அச்சகத்தில் அச்சிடப்பட்டு, எஸ். தியாகராச சுந்தரம் அவர்களால் வெளியிடப்பட்டது. ஆசிரியர் மு. கருணாநிதி. ஜக்ரியா காலனி, கோடம்பாக்கம், சென்னை—24